ஸ்ரீ சங்கரபகவத்பாதர்

அருளிய



பிரச்னோத்ர ரத்னமாலிகா
பால போத ஸங்க்ரஹம்
ஏகச்லோகி



ஸ்ரீ சங்கரபகவத்பாதர்

அருளிய

பிரச்ஞோத்ர ரத்னமாலிகா
பால போத ஸங்க்ரஹம்
ஏகச்லோகி

ஸ்ரீ ராம ஜயம்

ஜோதி நிலயம்

சென்னை - 18

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
ஸ்வாமிகள் பீடாரோஹண வைர விழா வெளியீடுகள்

பாமதி நூல்கள் 16.

முதற் பதிப்பு : 1969

விலை ஒரு ரூபாய்

வெளியிடுபவர் :

ஏ. கே. ஐயராமன்

'கனகதாரா'

P. 60, சீதம்மா காலனி
ஆழ்வார்பேட்டை
சென்னை-18

அச்சிட்டோர் : ஜீவன் பிரஸ், சென்னை-5

ஸ்ரீ

ஸ்ரீ சங்கர பகவத்பாதர்
அருளிய

பிரச்னோத்ர ரத்னமாலிகா
பால போத ஸங்க்ரஹம்
ஏகச்லோகி

தமிழில் அருளியது :
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்
(பிரச்னோத்ர ரத்னமாலிகா)
ஸ்ரீ அனந்தானந்த ஸ்வாமிகள்
(பால போத ஸங்க்ரஹம்)

ஜோதி நிலையம்
சென்னை-18.

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம்
காஞ்சிபுரம்.

முகாம்:
ப்ரோதத்தூர்
கடப்பை ஜில்லா

SEAL

20-1-67

பரமேச்வரனின் அவதாரமாக ஆவிர்பவித்து துர்மதங்களை கண்டித்து, அத்வைத தத்வத்தையும், ஷண்மதங்களையும் நிலைநிறுத்தி ஜனங்கள் கடைத்தேறுவதற்காக ப்ரகரண கிரந்தங்களையும், பல்வேறு பகவன் மூர்த்திகளைப் பற்றிய ஸ்தோத்ரங்களையும் இயற்றி மஹோபகாரம் செய்துள்ள ஸ்ரீ பகவத் பாதாசார்யாள் அநுக்ரஹித்துள்ள ஸ்தோத்ரங்களை தகுந்த வித்வான்களைக் கொண்டு தமிழில் மொழி பெயர்க்கச்செய்து, சென்னை ஆழ்வார்பேட்டை ஜோதி நிலயத்தின் மூலம் ஸ்ரீ ஜயராமன் வெளியிட ஆரம்பித்திருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

பக்தர்கள் இந்நூல்களின் மூலம் பொருளுணர்ந்து பகவன் மூர்த்திகளை பஜித்து எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.

—நாராயணஸ்ம்ருதி

ஆசார்யாள் அருள்வாக்கு

குருபரம்பரை

நமது ஆதி ஆசார்யர் அவதாரம் செய்து சுமார் இரண்டாயிரத்தைந்து நூறு வருஷங்களான தாக பழைய புஸ்தகங்களில் சொல்லி இருக்கிறது. அவர்களுக்கு நாலு சிஷ்யர்கள் இருந்ததாக ரவி வர்மா எழுதிய படங்களில் பார்க்கிறோம். அதே விதமாக சிவாலயங்களிலும் தெற்குப் பிரகாரத் தில் பரமசிவன் தக்ஷிணாமூர்த்தி சொரூபமாக நாலு சிஷ்யர்களுடன் உட்கார்ந்திருக்கிறார். அவரது வலக்கை சின்முத்திரையைக் காட்டுகிறது. கட்டை விரலையும் ஆள் காட்டி விரலையும் சேர்த் துப் பிடித்துக் கொண்டு அதன்மூலம் சிஷ்யர்க ளுக்கு உபதேசம் செய்கிறார். இதற்கு சின் முத் திரை என்று பெயர். அங்குஷ்டத்தையும் (கட்டை விரலையும்) தர்ஜனியையும் (ஆள் காட்டி விரலை யும்) சேர்த்துக் காட்டினால் அது எப்படி ஞானோப தேசம் ஆகு மென்று கேட்கலாம்.

வாயால் சப்தரூபமாகச் சொல்வதற்குப் பதி லாகக் கையால் தனது உபதேசத்தை தெரிவிப்ப தற்கு முத்திரை என்று பெயர். நாட்டிய சாஸ்தி ரங்களில் ஒரு சுலோகத்தை வாயால் சொல்லுவ தற்குப் பதிலாக சைகை காட்டுவதுண்டு. தேகத்

தின் சேஷ்டையால் கருத்தைத் தெரிவிப்பதற்கு முத்திரை என்று பெயர். பத்மமுத்திரை பிரும்மா வைச் சொல்லும். அவரைப்பற்றிச் சொல்ல வேண்டியபொழுது தாமரையில் அவர் பிறந்தவரா கையால் பத்மத்தைக் காட்டுவதுண்டு. விஷ்ணு வைச் சொல்லும் பொழுது சங்கமுத்திரையைக் காட்டுவார்கள். சின் முத்திரை என்ருல் என்ன அர்த்தம்? சித் என்ருல் ஞானம், முத்திரை என்ருல் அடையாளம், ஞானத்தை விளக்கும் அடையாளம் என்பது அதன் அர்த்தம். பரம சிவன் தக்ஷிணு மூர்த்தியாகிச் சின் முத்திரையைக் காட்டுகிருர். இவர் அருகில் ஸனகாதிகளாகிய நான்கு விருத்த சிஷ்யர்கள் இருக்கிருர்கள். மஹாலிங்கத்திற்கு நேர் தெற்கில் தக்ஷிணுமூர்த்தி ஸ்தாபனம் செய் யப் பட்டு ஒவ்வொரு சிவாலயத்திலும் இருக் கிருர்.

சித்திரம் வடதரோர்மூலே வ்ருத்தா: சிஷ்யா குருர்யுவா!!
குரோஸ்து மௌனம் வ்யாக்யானம் சிஷ்யாஸ்துச் சின்னஸம்சய:!!

இதன் பொருள்:—

ஆலமரத்தடியில் ஒரு ஆச்சரியத்தைக் கண் டீரோ? அங்கு பதினறு வயதுள்ள சிறுபிள்ளை ஒருவர் குருவாகவும் நான்கு வயோதிகர்கள் சிஷ் யர்களாகவும் உட்கார்ந்திருக்கிருர்கள். எவ்விடத் திலும் விருத்தரான குருவும் பால்யர்களான சிஷ் யர்களும் இருப்பதுண்டு. இங்கு மாறுபாடாக இருக்கிறது. சாதாரணமாக சிஷ்யர்கள் மௌன மாக இருக்க குரு பேசிக் கொண்டிருப்பார். ஆனல்

ஆலமரத்தடியில் உள்ள குரு சிஷ்யர்களில், குரு பேசாமலே இருந்து கொண்டு சிஷ்யர்களுடைய சகல சந்தேகங்களையும் நிவர்த்தி செய்துவிடுகிறார். அவர் தமது கைவிரல்களால் சின் முத்திரையைக் காட்டிச் சகல சந்தேகங்களையும் போக்கடித்துக் கொண்டிருக்கிறார். இந்தச் சின் முத்திரையால் எல்லா வேதங்களின் அர்த்தமும் தெரிவிக்கப்படுகிறது. பரம் பொருளும் நமது அறிவும் ஒரே வஸ்து என்பதைத் தக்ஷிணாமூர்த்தி சின் முத்திரையால் தெரிவிக்கின்றார்.

* இந்த இடத்தில் வாழை மரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அநேக வர்ணங்கள் பூசப்பட்டிருக்கின்றன. இத்தனையும் இருந்து விளக்குகள் இல்லாமல் போனால் இவைகளைப் பார்க்க முடியாது. விளக்குகள் இருந்து கண் இல்லையானால் பிரயோஜனம் இல்லை. இவ்விரண்டும் இருந்து மனம் இல்லாமற் போனால் உபயோகமில்லை. எல்லாம் இருந்து ஆத்மா இல்லாமற் போனால்மற்றவையெல்லாம் உபயோகப் படாது. ஆகையால் சித், அதாவது அறிவும் பரம் பொருளும் ஒரே வஸ்து என்று சின் முத்திரை காட்டுகிறது. "ஹே ஈசா!" என்று நாம் சொல்லும் போது ஆகாயத்தின் பக்கம் கையை நீட்டி ஆள் காட்டி விரலால் காட்டுவோம். 'நான்' என்று சொல்லும்போது கட்டைவிரலால் மார்பின் மேல் தட்டிக் காட்டுவோம். ஆகையால் சின் முத்திரையானது நான் என்ற வஸ்துவும், ஈசுவரனும் ஒரே வஸ்து என்

* சென்னை முத்தியால்பேட்டையில் செய்த பிரசங்கம்.

பதைக் காட்டுகிறது. ஈசுவரன் எவ்விடமோ இல்லை, எங்கும் நிறைந்திருக்கிருர் என்ற பிரம்ம ஜீவ ஐக்யத்தைச் சின் முத்திரை தெரிவிக்கிறது. ஞானத்தை நாம் கண்ணுல் பார்க்க முடியாது. ஆனுல் முத்திரை ரூபமாக பார்க்க முடியும். நமது ஆசார்யாள் இந்த ஞானத்தையே முத்திரை ரூப மாக நான்கு சிஷ்யர்களுக்கும் தெரியப்படுத்து கிருர் என்று சித்திரங்களால் அறிகிருேம்.

சுரேச்வராசார்யார், பத்மபாதாசார்யார், ஹஸ் தாமலகாசார்யார், தோடகாசார்யார் என்பன அந்த நான்கு சிஷ்யர்களின் பெயர்கள். சிஷ்யர் களுக்கு உபதேசிக்கும்படி நமதாசார்யார் யாரிட மிருந்து ஞானத்தை அடைந்தார், அவருடைய குரு எப்படி ஞானத்தை அடைந்தார் என்று பார்க்கும் போது, முதல் முதல் ஞானம் யாருக்கு வந்தது என்று நாம் தெரிந்து கொள்ள நேரிடும். நமது குருபரம்பரையைத் தியானம் செய்வதால் ஞான மும் க்ஷேமமும் உண்டாகும். எந்த வித்தையைக் கற்றுக் கொள்ளும் போதும் குரு பரம்பரையை அறிந்து கொண்டு படிப் போமானுல், அவர்கள் எல்லோருடைய அனுக்ரஹமும் நமக்கும் உண் டாகும்.

நாராயணம் பத்மபுவம் வஸிஷ்டம்
சக்திம் ச தத்புத்ரபராசரம் ச!
வ்யாஸம் சுகம் கௌட பதம் மஹாந்தம்
கோவிந்த யோகீந்த்ரம் ஆதாஸ்ய சிஷ்யம்
ஸ்ரீசங்கராசார்யஅதாஸ்ய பத்ம பாதம்ச
ஹஸ்தாமலகம் ச சிஷ்யம்!
தம் தோடகம் வார்த்திககார அன்யானஸ்மத்
குரூன் ஸந்ததமானதோஸ்மி!!

கோவிந்தபகவத் பாதாள் நமதாசார்யர்களின் குரு. தங்களுடைய குருவைத்தியானம் செய்யும் பொருட்டு நமதாசார்யர்கள் 'பஜகோவிந்தம்' என்ற கிரந்தத்தைச் செய்தார்கள். அதில் மஹாவிஷ்ணு வின் பெயரும் ஆசார்யாருடைய குருவின் பெயரும் கலந்து வருகின்றன. மேற் சொன்ன குரு பரம்பரைச் சுலோகத்தில் சொல்லப் பட்டிருப்பவர்களில் ஸ்ரீமந்நாராயணன் முதல் சுகர் வரையில் சிஷ்யர் புத்திர பரம்பரையாக இருக்கிறார்கள். பிறகு கௌட பாதர் முதல் சிஷ்ய பரம்பரை.

இந்தப் பீடம் அப்படிப்பட்ட மகான்களால் பிரதிஷ்டை செய்யப் பட்டது. விந்திய பர்வதத்திற்கு வடக்கில் இருக்கும் பிராமணர்களுக்கு பஞ்ச கௌடர்கள் என்றும், அம்மலைக்குத் தெற்கில் உள்ள பிராம்மணர்களுக்கு பஞ்ச திராவிடர்கள் என்றும் பெயர். நமதாசார்யர்களின் குருவினுடைய குருவாகிய கௌட பாதர் கௌடவகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய சிஷ்யர் நமதாசார்யாளின் குருவாகிய கோவிந்த யோகீந்திரர். அவருடைய சிஷ்யர் நமது ஆசார்யாள்.

குருவின் பெருமை

குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு: குருர்தேவோ மஹேச்வர:
குரு: ஸாக்ஷாத் பரப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:!!

குருவின் உபதேசம் இல்லாமல் எந்த ஒரு ஸத் காரியமும் பிரயோசனகரமாக ஆகாது. குருவின் மூலமாகத்தான் எந்தக் காரியத்தையும்

செய்ய வேண்டும். அப்போதுதான் அது பல வத்தாக ஆகும்.

இந்த ச்லோகத்தில் ப்ரம்மா, விஷ்ணு, மஹேச்வரன் இந்த மும் மூர்த்திகளும் இதற்கும் மேலான பரப்ரஹ்மத்துக்கும் குருதுல்யமானவர்; அதாவது குரு தாம் பிரம்மா, குருதாம் விஷ்ணு அவர்தாம் மகேசுவரனுகவும், அவரே பரம்பொருளாகவும் நமக்கு அனுக்ரஹம் செய்யக் கூடியவர் என்று கூறி இருக்கிறது. உபநிஷத்தில் ஓர் இடத்தில், 'குருவைவிட உயர்ந்தவர் எவரும் இல்லை' என்று சொல்லி இருக்கிறது. அதாவது தெய்வத்தைக் காட்டிலும் குரு சிரேஷ்டமானவர் என்ற கருத்து.

குரு தெய்வத்துக்குத் துல்யமானவர் என்று சொல்வதைக் காட்டிலும், தெய்வத்துக்கும் மேலானவர் என்று சொல்லுவதுதான் கருத்து, பொருத்தம். ஏனென்ருல் தெய்வ அபசாரம் ஏற்பட்ட ஒருவனுக்கு குருவின் அனுக்ரஹத்தால் அபசார நிவர்த்தி ஏற்படுகிறது. எப்படி ஸ்ரீராமனுடைய அக்னி அஸ்திரத்துக்குப் பயந்து ஓடியவனுக்கு மூன்று லோகத்திலும் சரண்யன் கிடைக்காமல் திரும்ப ஸ்ரீராமனிடத்திலேயே வரும்படியாக இருந்ததோ, அதேமாதிரி குரு அபசாரம் ஏற்பட்டால் குருவினிடத்தில்தான் அதற்கு நிவர்த்தி ஏற்படும். இதனுல் தெய்வத்தைவிட குரு சிரேஷ்டமானவர் என்பதற்கு இது ஒரு காரணம்.

சாதாரணமாக ஒவ்வொருவரும் ஈசுவர ஆராதனம் பண்ணவேண்டும். அதனுல் நம்முடைய

கிலேசங்கள் நீங்குகின்றன. கிலேசம் எப்பொழுது நீங்குகிறது என்ருல் இந்த ஜன்மாவிலிருந்து (ஜனனமரணத்திலிருந்து) விடுதலே ஏற்படும் போதுதான். ஜன்மா இருக்கும் வரையில் நம்மை விட்டுக் கிலேசம் போய்விட்டதாகச் சொல்ல முடியாது. கிலேசம் லேசங் கூட இல்லாத ஒருவர் இந்த உலகில் இருக்கிருர் என்ருல் அவர் தாம் தெய்வம். அவரைப் பார்க்க முடியாது. ஆளுல் கிலேச லேச ரஹிதரான அவரை ஆராதனம் செய்தால் நமக்குள்ள இந்தக் கிலேசம் நிவிருத்தியாகும் அதற்காகத்தான் தேவாலய வழிபாடு.

லௌகிக விவகாரத்தில் கூட நாம் பார்க்கலாம். யாரோடு நாம் அதிகம் நெருங்கிப் பழகுகிருேமோ அவருடைய பழக்கங்கள் அவரைப்பற்றிய ஞாபகங்கள், அதே குணங்கள் எல்லாம் நமக்கும் ஏற்பட்டுக் கடைசியில் நாமும் அவராகவே ஆகி விடுகிருேம். அதேபோல கிலேசலேச ரஹிதரான தெய்வத்தை ஆராதிப்பதனுலும், தியானம் செய்வதனுலும் கடைசியில் கிலேசராஹித்யம் ஏற்பட்டு நாமும் தன்மயமாக அதாவது ஈசுவரனுகவே, ஆகிவிடுகிருேம். அதுதான் ஜீவன் முக்தி நிலே.

ஆளுல் ஈசுவரனேத் தியானம் செய்ய அவரை நேரில் யாரும் பார்த்ததில்லே. நேரில் பார்க்காத ஒரு ரூபத்தைக் கற்பனே செய்வது அசாத்தியம். சாத்தியமாளுலும் முகத்தைப் பார்க்கும் போது பாதங்களேப் பார்க்க முடியாது. பாதத்தைப்

பார்க்கும்போது மற்ற அங்கங்கள் மறைந்து போகும். ஓர் அங்கத்தைத் தியானம் செய்யும் போது அந்த அங்கம் மட்டும் தனியாகத் தோன்றும். நேரில் பார்ப்பது போல முழு ரூபத்தையும் பார்க்க இயலாது. நேரில் பார்த்தவர்களைப்பற்றித் தியானம் செய்வதே சிரமமாக இருக்கிறது. மனத்தில் அவ்வளவு சுலபமாக உருவம் பதிந்து விடுவதில்லை. ஓவியர்கள் நம்மைவிட சிரேஷ்டமானவர்கள். அவர்கள் ஒவ்வோர் அங்கத்தைப் பார்க்கும் போதும் அதை அப்படியே மனத்தில் பதியவைத்துக் கொள்கிறார்கள்.

குரு ஈசுவரனைப் போல அல்ல. அவரை நேரில் பார்க்கிறோம். அவருடன் சில காலம் பழகுகிறோம். ஆகையால் அவரைப் பற்றி மனத்தில் தியானம் செய்வது சுலபம். நமக்குச் சில காரியங்கள் செய்யும் போது அதை எப்படிச் செய்தால் சரியாக இருக்கும் எந்த வழியில் சென்றால் நேர்மையாக இருக்கும் என்று சந்தேகங்கள் ஏற்படுகின்றன. இவற்றை எல்லாம் குருவிடத்தில் நேரில் தெரிவித்து அதன்படி செய்து விடுகிறோம். அதனால் நம் மனத்தில் ஏற்படும் பாரம் குறைகிறது. இப்படியே குருவினிடத்தில் நெருங்கிப் பழகுகிறோம். அவரை நேரில் காண முடியாத சந்தர்ப்பங்களிலும் நமக்குச் சில சந்தேகங்கள் ஏற்படுகின்றன. அப்போதும், குருவினிடத்தில் உள்ள நெருங்கிய பழக்கம் காரணமாக, அதைத் திரும்பத்திரும்ப எப்படிச் செய்தால் குருவின் அபிப்ராயத்துக்குச் சரியாக இருக்கும் என்று திரும்பத்திரும்ப யோசித்துப்

பார்த்து அதன்படி செய்கிறோம். குருவைப்பற்றி அடிக்கடி நினைப்பதால் அவருடைய அபிப்ராயமே நம்முடைய மனத்திலும் பிரதி பலிக்கிறது. லோக வியவகாரத்தில் கூட நெருங்கிய ஒரு சிநேகித ருடைய அபிப்ராயமும், நம்முடைய அபிப்ராய மும் ஒரே விஷயத்தில் ஒத்திருப்பதைப் பார்க்கி றோம். இதனால் குருவின் ஆராதனம் ஈசுவர ஆராதனத்தைவிடச் சுலபமாகவும் சிரேஷ்டமாக வும் இருக்கிறது. குரு சிரேஷ்டமானவர் என்பதற்கு இது மற்றொரு உதாகரணம்.

சைவன் சிவனை உபாசிக்கிறான். அப்போது விஷ்ணுவினிடத்தில் நிகிருஷ்ட புத்தி ஏற்படு கிறது. வைஷ்ணவனுக்கு இதே போலச் சிவ னிடத்தில் நிகிருஷ்டபுத்தி ஏற்படுகிறது. இந்த மாதிரி அந்த அந்த மதஸ்தர்களிடத்தில் தங்கள் உபாசனைத் தெய்வதை விடமற்ற தெய்வத்தினி டத்தில் நிகிருஷ்ட புத்தி ஏற்படுவதால் தெய்வ அபசாரம் சம்பவிக்கிறது. ஆனால் குருவினிடத் தில் இவ்விதமான அபசாரம் ஏற்படுவதில்லை. அதனால் குருசிரேஷ்டமானவர் என்பதற்கு இது வும் ஒரு காரணம். ஆகையால் குருவை ஆரா தனம் செய்வது மிகவும் முக்கியமானது.

தெய்வத்தினிடம் மற்றவர்களை விட நான் அதிகபக்தி உள்ளவன். ஈசுவர ஆராதனம், குரு ஆராதானம் செய்கிறேன். புண்ய கர்மாக்கள் அதிகம் செய்கிறேன். நான் சிரேஷ்டமானவன். எனக்கு அடுத்த பிறவி கிடையாது, என்று ஒவ் வொருவரும் நினைக்கக் கூடும்.

அடுத்த பிறவி உண்டா இல்லையா, இந்தப் பிறவிக்குப் பிறகு மோக்ஷம் கிடைக்குமா, கிடைக்காதா என்ற சந்தேகங்களும் எழும்புகின்றன. இதைப் பரிசோதித்துத் தெரிந்துகொள்ள இந்தப் பிறவியிலேயே சுலபமான மார்க்கம் ஒன்று இருக்கிறது.

வனத்தையும் பவனத்தையும் அதாவது காட்டில் வசிப்பதையும், அரண்மனை வாசத்தையும், எவர் சமமாக நினைக்கிறார்களோ, மித்திரனையும் சத்துருவையும் யார் சமமாகப் பாவிக்கிறார்களோ, எப்படிப்பட்ட அழகான ஸ்திரீயைப் பார்க்கும் போதும் போகஅர்ஹமாக நினைக்காமல் ஒட்டாஞ் சல்லியின் அழகுக்குச் சமமாக எண்ணுகிறார்களோ அவர்கள் தாம் தெய்வம்.

காமம் குரோதம், பயம் என்று கிரமமாக நிறையச் சொல்லப்பட்டுள்ளன. அவற்றில் முதல் மூன்றும் முக்கியமானவை. எந்த ஸ்த்ரீயைப் பார்த்தும் மனம் சஞ்சலிக்காமல், மற்ற பொருள்களைப் போலவே பாவிப்பதனால் காமம் ஒழிகிறது. நமக்கு விருப்ப மல்லாத காரியத்தை ஒருவன் செய்யும் போது நம்மையும் மீறி அவனிடம் கோபம் வருகிறது. அந்தக் கோபம் வராமல் அதைத் தடுத்து அடக்க வேண்டும். அரண்மனையில் இருக்கும் போது சந்தோஷமோ, காட்டில் இருக்கும் போது பயமோ ஏற்படக் கூடாது. உதாரணமாக காட்டில் சிங்கத்தைக்கண்டு பயப்படக் கூடாது. அது நம்மைக் கொல்லவரும்போது

அந்த ஆபத்திலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள எண்ணக் கூடாது. அந்த ஆபத்திலிருந்து தப்பினுலும் பின்னுல் சம்பவிக்கக் கூடிய அநேக ஆபத்துக்களுக்கு இந்தச் சரீரத்தைக் காப்பாற்றி வைப்பதாகத்தான் ஆகும். இந்த ஆபத்தோடு ஆபத்துகளுக்கு ஒரு முடிவு ஏற்படுவதை நாம் தவிர்க்க விரும்பக் கூடாது. இதனுல் பயம் ஒழிகிறது. காமம், குரோதம், பயம், இம்மூன்றையும் ஜயிப்பவன் தான் பிறவியிலிருந்து விடுதலை ஏற்பட்டு மோக்ஷத்தை அடைகிருன்.

இவை போன்ற உபதேச மொழிகளால் நமக்கு ஆத்ம சுத்தி ஏற்பட வழிகாட்டுபவர் குரு. அவரை ஆராதனம் செய்வது முக்கியம். குருபரம்பரையை ஸ்மரிக்க நேர்ந்தது. அப்படி ஸ்மரித்ததால் தன்யனுனேன்.

நீங்கள் எல்லோரும் குரு பரம்பரையை ஸ்மரித்து க்ஷேமம் அடைவீர்களாக.

ஸ்ரீ

ஸ்ரீ சங்கரபகவத்பாதர்

அருளிய

ஸ்ரீ பிரச்னோத்ர ரத்னமாலிகா

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீசந்திர சேகரேந்திர ஸரஸ்வதி
ஸ்ரீபாதாள் தமிழில் அருளியது.

ஸனாதனதர்ம விஷயங்கள் பலவற்றையும் ஸாரமாகத் திரட்டி வெகுசுலபமாகக் கற்றுக் கொள்ளும்படி வினாவிடை ரூபமாக ஸ்ரீஆதி சங்கர பகவத்பாதாள் உபதேசித்திருக்கிறார்கள்.

சைவம் வைஷ்ணவம் முதலிய ஆறு சமயங்களையும் நமது புண்ணிய பூமியில் ஸ்தாபிக்கும் பொருட்டு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னர் நமது நாட்டில் அவதரித்த ஸ்ரீஆதிசங்கரபகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் பிரச்னோத்ர ரத்ன மாலிகை என்னும் இந் நூலில் வேதத்தில் சொன்ன ஸத்தியம் 'தர்மம்' இவைகளின் பொருளை விவரித் திருக்கிறார்கள்.

இது ரத்னங்கள் போன்று 67 சுலோகங்களாலான ஒருமாலை. 66 வது ச்லோகம்

1416—2

பிரணவ அக்ஷரத்துடன் முடிவடை கிறது. 67 வதான கடைசி ச்லோகம் ஆபரணம் போல் விளங்கும்படிச் செய் கிறது.

ஒருவன் ஒரு முத்துமாலையைக் கண்டத் தில் தரித்திருந்தால் அது அவனை எப்படி அழகு படுத்துமோ, அப்படியே இச் சிறந்த பிரச்னோத்ர ரத்னமாலையை கண்ட த்தில் (மனத்தில்) தரிக்கின்ற ஒருவனை முக்தர்களின் கூட்டத்தில் ஆபரணம் போல் விளங்கும்படிச் செய்கிறது.

பிரச்னோத்ர ரத்னமாலையில் 67 சுலோகங் கள் இருக்கின்றன 65 தான் நமதாசாரி யாள் செய்ததாக நான் நினைக்கிறேன். ஓம் என்று 66 வது சுலோகத்தில் சொல்லி இருப்பதுடன் அவர்கள் முடித்து விட்டார்கள். முதல் சுலோகமும் கடைசி சுலோகமும் பக்தர்களால் சேர்க்கப்பட் டிருக்க வேண்டும். நமதாசார்யாள் இயற் றிய கிரந்தங்களிலெல்லாம் இதுமிகஇலகு வானது. ஸம்ஸ்கிருதம் படிக்கும் குழந் தைகளுக்கும் உபயோகப் படக் கூடியது.

இஹபரசிரேயஸ்ஸையடைய சாமர்த்திய முள்ள யார்தான் இந்தப் பிரச்னோத்ர ரத்னமாலிகையை மனதில் வாங்கி இதனால் அலங்கரிக்கப் படவில்லை? (எல்லோருக்கும் இது அழகு அளிக்கிறது என்று பொருள்)

கேள்வி: ஸ்வாமி, கிரஹித்துக்கொள்ளவேண்டியது என்ன?

பதில்: குரு வசனம்.

கே: தள்ளவேண்டியது என்ன?

ப: அகார்யம்.

கே: குரு யார்?

ப: உண்மையை அறிந்தவர். தன்னை அண்டின சிஷ்யர்களின் க்ஷேமத்திற்காக இடைவிடாது பாடு படுபவர்.

கே: அறிவுள்ளவன் துரிதமாகச் செய்ய வேண்டியது என்ன?

ப: ஸம்ஸார பரம்பரையைக் கத்திரித்தல். (செத்துச்செத்துப் பிறக்காமல் மோக்ஷமடைவது.)

கே: மோக்ஷ மரத்துக்கு விதை எது?

ப: உள்ளதை உள்ளபடி அறிந்து காரியத்தில் காட்டுவது.

கே: எது பத்தியம்? (ஹிதமானது)

ப: தர்மம்.

கே: எவன் சுத்தன்?

ப: எவன் மனது சுத்தமாக இருக்கிறதோ அவன்.

கே: எவன் பண்டிதன்?

ப: விவேகி (விவேகத்தையுடையவன்.)

கே: எது விஷம்?

ப: பெரியோர் வார்த்தையை அலட்சியம் செய்வது.

கே: ஸம்ஸாரத்தில் ஸாரமெது?

ப: அடிக்கடி இதை நினைத்துக்கொண்டிருப்பதே. (ஸம்ஸாரத்தில் ஸாரமேது என்று நினைத்துக்கொண்டே இருப்பதால் பற்றுவிட்டுப் பிறப்பறுக்கலாம்.)

கே: மனிதர்கள் வேண்ட வேண்டியது எது?

ப: தான், பிறர் இரண்டுபேரின்க்ஷேமத்திற்காக ஈடுபடும் ஜன்மம்.

கே: கள்போல் மயக்கத்தை உண்டுபண்ணுவது எது?

ப: பற்றுதல். (ஆசை, சிநேகம்.)

கே: திருடர்கள் யார்?

ப: இந்திரியங்களை இழுத்துக்கொண்டு போகும் விஷயங்கள்தான்.

கே: ஸம்ஸாரக் கொடி எது?

ப: ஆசைதான்.

கே: சத்துரு யார்?

ப: சோம்பேறித்தனமே.

கே: எல்லோரும் பயப்படுவது எதனிடம்?

ப: மரணத்தினிடம்.

கே: குருடனைக்காட்டிலும் குருடன் யார்?

ப: ஆசையுள்ளவன்.

கே: சூரன் யார்?

ப: துன்மார்க்கத்தில் மனம்போகாமல் அடக்கு கிறவன். (ஸ்த்ரீகளது பார்வைகளான பாணங்களால் அடி படாதவன்.)

கே: காதாகிய அஞ்ஜலியால் சாப்பிடக்கூடிய அமிருதம் எது?

ப: ஸாதுக்களுடைய உபதேசம். (இரண்டு கைகளையும் சேர்த்துக் குவித்துக்கொள்வது அஞ்ஜலி. காதுகுவிந்திருந்திருப்பதால்அஞ்ஜலி என்று சொல்லப் பட்டிருக்கிறது.)

கே: மதிப்புக்கு மூலம் எது?

ப: ஒருவனை எதையும் கேட்காதிருத்தல்.

கே: அளவிட முடியாதது எது?

ப: பெண்களின் நடை.

கே: ஸமர்த்தன் யார்?

ப: பெண்களின் நடையினுல் வஞ்சிக்கப் படாதவன்.

கே: துயரம் யாது?

ப: திருப்தியின்மை.

கே: கீழ்மை யாது?

ப: கீழ்ப்பட்டவனிடத்தில் யாசிப்பது.

கே: உயர்ந்த ஜீவனம் யாது?

ப: குற்றமின்மை.

கே: அறிவின்மை யாது?

ப: தேர்ச்சியிலும் (கற்றதில்) அப்பியாஸ மின்றி இருத்தல்.

கே: விழிப்புடையோன் எவன்?

ப: விவேகமுள்ளவன்.

கே: உறக்கம் யாது?

ப: ஜீவர்களது மூடத்தன்மை.

கே: தாமரை இலைத் தண்ணீர்போல் நிலை யில்லாதவை எவை?

ப: இளமை, செல்வம், ஆயுள் என்பவை.

கே: சந்திரகிரணம் போன்றவர் (பிறருக்கு ஹிதஞ்செய்பவர்) யார்?

ப: நல்லோரே.

கே: நரகம் யாது?

ப: பிறர் வசமாயிருத்தல்.

கே: ஸௌக்யம் யாது?

ப: ஸர்வ ஸங்க பரித்யாகம்.

கே: ஸாதிக்கத்தக்கது யாது?

ப: ஜீவர்களுக்கு ஹிதம் செய்தல்,

கே: பிராணிகளுக்குப் பிரியமுள்ளது யாது?

ப: பிராணன். (உயிர்)

கே: எது அனர்த்தத்தைத் தரும்?

ப: அகம்பாவம்.

கே: எது ஸுகத்தைத் தரும்?

ப: ஸத்ஸங்கம். அதாவது நல்ல மனதுள்ளவர்களின் சினேகம்.

கே: எல்லா துக்கத்தையும் தொலைப்பதில் எவன்கெட்டிக்காரன்?

ப: ஒன்றும் வேண்டாமென்று விட்டுக் கொடுப்பவன்.

கே: மரணத்திலும் எது பெரியது?

ப: அசட்டுத்தனம்.

கே: விலை மதிக்கப்படாதது எது?

ப: ஸமயத்தில் கொடுத்தது.

கே: சாகும்வரையில் குத்துவது எது?

ப: இரகஸ்யத்தில் செய்த பாபம்.

கே: எதற்காகப் பிரயத்தனம் செய்ய வேண்டும்?

ப: வித்தியாப்யாஸம், நல்ல மருந்து, தானம் செய்தல் இவைகளுக்காக.

கே: அலக்ஷ்யம் செய்யவேண்டியது எது?

ப: கெட்டவர்கள், பி றரு டை ய மனைவி, பிறருடைய பொருள் என்பவை.

கே: இராப்பகல் நினைக்கவேண்டிய எது?

ப: ஸம்ஸாரத்தில் ஸாரம் இல்லை என்பது ஸ்த்ரீயல்ல.

கே: பிரியமாகச் செய்யவேண்டியது எது?

ப: தீனர்களிடத்தில் கருணையும் ஸாதுக்களிடத்தில் சிநேகமும்.

கே: பிராணன் போவதாயிருந்தாலும், எவனுடைய ஆத்மாவை நல்லவழிப்படுத்த முடியாது?

ப: போக்கிரிகள், நித்ய ஸந்தேகி, அழுமூஞ்சி, நன்றியில்லாதவன்.

கே: ஸாது யார்?

ப: நல்ல நடத்தையுடையவன்.

கே: எவன் அதமன்? (தாழ்ந்தவன்)

ப: கெட்ட நடத்தையுடையவன்.

கே: ஜகத்தை யார் ஜயிக்கலாம்?

ப: ஸத்தியமும் பொறுமையுமுள்ளவன்.

கே: எவனைத் தேவர்களும் கும்பிடுகிறார்கள்?

ப: தயை உடையவனை.

கே: எதைக் கண்டு நடுங்கவேண்டியது?

ப: ஸம்ஸாரமாகிய காட்டைக் கண்டு நல்லறிவுள்ளவர் பயப்பட வேண்டும்.

கே: ஜீவராசிகள் எவனுக்கு வசமாகும்?

ப: ஸத்யமும் பிரியமுமான வசனமுடைய வணக்கமுள்ளவனுக்கு.

கே: நிற்கவேண்டியது எங்கே?

ப: காணப்படுவனவும் காணப்படாதனவுமாகிய இஹபர லாபங்கள் நிரம்பிய வழியில்.

கே: குருடன் யார்?

ப: படித்திருந்தும் கெட்ட காரியஞ்செய்பவன்.

கே: செவிடன் யார்?

ப: ஹிதத்தைக் கேட்காதவன்.

கே: ஊமை யார்?

ப: இனிமையான வார்த்தைகளைச் சரியான காலத்தில் சொல்ல அறியாதவன்.

கே: தானம் என்பது எது?

ப: கேட்காது கொடுத்தல்.

கே: சிநேகிதன் யார்?

ப: பாவஞ் செய்யாது தடுப்பவன்.

கே: அழகு எது?

ப: சீலம்

கே: வாக்கிற்கு அழகு எது?

ப: ஸத்யம்.

கே: மின்னலொளிபோல் சஞ்சலமானவை யாவை?

ப: துர்ஜனர் ஸங்கமும் (தீயவர் நட்பும்) ஸ்த்ரீகளும்.

கே: கலிகாலத்திலும் குலசீலத்தினின்றும் சலிக்காதவர் (பிறழாதவர்) யாவர் ?

ப: ஸத்புருஷர்களே.

கே: சிந்தாமணிபோல் துர்லபமானது எது? (கிடைத்தற்கரியது)

ப: சதுர்பத்ரம். (பத்ரமாக இருப்பது பத்ரம், சுபம்.)

கே: அந்த சதுர்பத்ரம் என்னவென்று அறிஞர் சொல்லுகின்றனர் ?

ப: பிரிய வாக்குடன் தானம், கர்வமில்லா ஞானம், க்ஷமையுடன் கூடிய சௌரியம், தியாகத்துடன் கூடிய செல்வம்.

கே: பரிதாபப்படத்தக்கது எது ?

ப: கார்ப்பண்ணியம். (கருமித்தனம். தனக்குமில்லாமல் பிறருக்குமில்லாமல், இகத்துக்குமில்லாமல், பரத்துக்குமில்லாமல் நிரம்ப வைத்துக் கொண்டிருத்தல்.)

கே: ஸௌகரியங்களிருப்பின் எது பிரசஸ்தம் ? (புகழப்படுவது)

ப: ஔதார்யம். (உதாரகுணம்)

கே: அறிவுடையோர் யாரைப் பூஜிப்பர் ?

ப: இயல்பாகவே எப்பொழுதும் வணக்கமுள்ளோரை. (காரியத்தை உத்தேசித்து விநயத்துடன் இருப்பது சுபாவ விநயமாகாது.)

(காரியத்தை உத்தேசித்து விநயத்துடன் இருப்பவன் ஏற்ற மரத்துக்குச் சமானமென்று ஒரு சுலோகமிருக்கிறது. சால் நிரம்பினவுடன் ஏற்ற மரத்தின் தலை ஆகாயத்திலிருக்கும், சால் வடிந்ததும் தலை குனிந்துவிடும். அப்படியே காரியத்தை உத்தேசித்து விநயத்துடன் இருப்பவன் ஜீவனம் கிடைக்காதபோது தலையைத் தொங்கப் போடுவான். ஜீவனம் கிடைத்துவிடின் தலை விரித்துக் கொள்ளும்.)

கே: நாம் பிறந்துள்ள குலமாகிய தாமரை எந்த சூரியனைக் கண்டால் ஆனந்தத்துடன் பிரகாசிக்கும்?

ப: குணங்கள் பரிபூரணமாக இருந்தும், பரிபூரணமான விநயத்துடன் இருப்பவனைக் கண்டால் குலமாகிய தாமரை பிரகாசிக்கும்.

கே: இந்த பிரபஞ்சம் யாருக்கு வசப்படும?

ப: பிரியமாகப் பேசுவதற்கு கற்றுக்கொண்டு தர்மத்தை அனுஷ்டிப்பவனுக்குப் பிரபஞ்சம் வசப் பட்டுவிடும்.

(ஜகத்தை வசியப்படுத்துகிறதற்காக விநயத்தைக் கைக்கொள்ளக் கூடாது. விநயத்துடன் இருந்தால், ஜகத்து தானக வசப்பட்டுவிடும்.)

கே: வித்வான்களின் மனத்தைக் கவர்வது யாது?

ப: நல்ல கவிதையும் புத்தி எனும் ஸ்திரீயும்.

கே: விபத்து எவனைத் தீண்டாது?

ப: பெரியோர் வார்த்தையை அனுசரித்து நடப்பவனையும், அடக்கமுள்ளவனையும்.

கே: லக்ஷ்மி யாரை விரும்புவாள்?

ப: சுறுசுறுப்பான சித்தமுடைய, நீதி தவருத நடை யுடையவனை.

கே: எவனை விட்டு விரைவில் விலகுவாள்?

ப: பிராம்மணனையும், குருவையும், தேவர்களை யும் நிந்திக்கும் சோம்பேறித்தனமுடையவனை.

கே: வாஸஞ் செய்யவேண்டிது எங்கே?

ப: நல்லவர்களுடைய ஸமீபத்தில், அல்லது காசி க்ஷேத்திரத்தில்.

கே: விட்டு விலகவேண்டிய தேசம் யாது?

ப: கீழ் மக்களுள்ளதும், லோபியாயுள்ள அரசனுடையதுமான தேசம்.

கே: எதனுல் மனிதன் துக்கமில்லாதவனுக இருப்பான்?

ப: வணக்கமுள்ள பெண்சாதியாலும், நிலை யுள்ள ஐச்வர்யத்தாலும்.

கே: இவ்வுலகில் விசனிக்கப்படத் தக்கவன் எவன்?

ப: பொருளிருந்தும் கொடாதவன்.

கே: இகழ்ச்சிக்குக் காரணம் எது?

ப: தாழ்ந்தவர்களிடம் யாசிப்பது.

கே: ஸ்ரீ ராமனைவிட சூரன் யார்?

ப: மன்மத பாணங்களால் அடிக்கப்பட்டும், தன்னிலை தவருதவன்.

கே: இரவும் பகலும் சிந்திக்கத்தக்கது எது?

ப: ஈச்வரனது பாதாரவிந்தங்களே-ஸம்ஸார மல்ல.

கே: கண்ணிருந்தும் குருடர் யார்?

ப: நாஸ்திகர்களான மனிதர்கள்.

கே: முடவன் யார்?

ப: முதிர்ந்த வயதில் தீர்த்த யாத்திரை போகிறவன்.

கே: முக்கியமான தீர்த்தம் எது?

ப: சித்தத்திலிருக்கும் அழுக்கை எது நீக்கு கிறதோ அதுதான்.

கே: மனிதர்களால் ஸ்மரிக்கத்தக்கது எது!

ப: எப்பொழுதும் ஹரி நாமமே. மிலேச்ச பாஷையல்ல!

கே: நல்ல புத்தியுடையவனுல் சொல்லத் தகாதது எது?

ப: பிறரது குற்றமும், அஸத்யமும்.

கே: மனிதர்களால் ஸம்பாதிக்கத்தக்கது எது?

ப: கல்வி, செல்வம், வலிமை, புகழ், புண்யம் இவைகள்.

கே: ஸகல குணங்களேயும் அழிப்பது எது?

ப: லோபம்-கருமித்தனம்.

கே: பகைவன் எவன்?

ப: காமம்.

கே: எந்த ஸபையை விலக்க வேண்டும்?

ப: வயது முதிர்ந்த மந்திரிகளில்லாத ஸபையை.

கே: இவ்வுலகில் மனிதன் எவ்விஷயத்தில் ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும்?

ப: ராஜ ஸேவை செய்வதில்.

கே: பிராணனேவிட பிரியமானது எது?

ப: குல தர்மமும்,ஸாதுக்களின் சேர்க்கையும்

கே. இரட்சிக்கத்தக்கது யாது?

ப: கீர்த்தியும், கற்புள்ளவளும், சுயபுத்தியுமாம்.

கே: லோகத்தில் கற்பகக்கொடியாயுள்ளது எது?

ப: ஸத்சிஷ்யனுக்கு அர்ப்பணம் செய்யும் படிப்பு. (படித்தவன் ஒவ்வொருவனும் முன்னுளில் தான் படித்த படிப்பைச் சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டும். இந்நாளில் (L.T.) எல். டி. கள்தான் அதைச் செய்கிறுர்கள். மற்றவர்கள் தாம் படித்த படிப்பைக் காலக்ஷேபத்திற்காக உபயோகப் படுத்துகிறுர்கள்.)

கே: அக்ஷயவடம் போன்றது எது?

ப: விதிப்படி ஸத்பாத்திரத்தில் கொடுக்கப் படும் தானம்.

கே: எந்த ஆயுதம் எல்லோருடைய கையிலும் உள்ளது?

ப: யுக்தி, (நியாய பூர்வமாக நிருபணம் செய்யக்கூடிய சக்தி.

கே: எல்லோருக்கும் தாயார் யார்?

ப: பசு. (தன் குழந்தைக்குப் பால் கொடுத்து விட்டு: ஊருக்கும் பால் கொடுக்கும் தாய் பசு, அதை நாம் ரட்சிக்க வேண்டும்.)

கே: எது ஸேனே?

ப: தைரியம்.

கே: எது யமன்?

ப: கவனமில்லாதிருந்துவிடல்.

கே: விஷம் எங்கிருக்கிறது?

ப: துஷ்ட ஜனங்களிடத்தில் இருக்கிறது.

கே: தீட்டு எது?

ப: கடன்தான். (கடன்காரனுக்கு மனிதர் ஒளிவதுபோல் வேறு எதற்கும் ஒளிவதில்லே. தீட் டில் கோவிலுக்குப் போகக்கூடாது, சபைக்குப் போகக் கூடாது. கடன்பட் டவனும் அப்படியே போக மாட்டான்.)

கே: அபயம் (பயமற்ற நிலேமை) எது?

ப: வைராக்கியம். (ஆசையை விட்டுவிடின். அதுவே அபயம்.)

கே: எது பயம்?

ப: பணம்தான்.

கே: நரர்களுக்குத் துர்லபமானது எது? (கிடைத்தற்கரியது)

ப: ஹரி பக்தி.

கே, எது பாதகம்?

ப: இம்சித்தல்.

கே: பகவானுக்கு யாரிடத்தில் பரம பிரியம் ?

ப: தானும் மனதில் உபத்திரவப்படாமல் பிறர்க்கும் உபத்திரவத்தை நினைக்காதவனிடத்தில்.

கே: எதனுல் காரியஸித்தி உண்டாகிறது?

ப: தபஸினுல். (ஏகாக்ரசித்தனுக ஒரு காரியத்தில் நினைவிருப்பது.)

கே: புத்தி எங்கிருக்கிறது?

ப: பிராம்மணனிடத்தில்.

கே: நிஜமான புத்தி எது?

ப: பெரியோரை அடுத்துச் சுச்ரூஷை செய்து அடையும் புத்தி.

கே: பெரியோர் யார் ?

ப: தர்ம தத்துவங்களையறிந்தவர்கள். (அவர்கள் வயதில் சிறியோராகவிருப்பினும் பெரியோர்களே.)

கே: புகழ் பெற்றவனுக்கு மரணத்தைக் காட்டிலும் எது பெரியது?

ப: அபகீர்த்தி.

கே: எவன்ஸுகி?

ப: தனவான்.

கே: செல்வம் என்பது எது?

ப: எதனுல் இஷ்டஸித்தி உண்டாகுமோ அதுவே செல்வம்.

கே: எல்லா ஸுகத்திற்கும் மூலம் எது?

ப: புண்யம்.

கே: துக்கத்திற்கு மூலம் எது?

ப: பாபம்.

கே: ஐசுவரியம் யாருக்கு உண்டாகும்?

ப: ஈசுவரனை பக்தியுடன் ஆராதிப்பவனுக்கு.

கே: எவன் முன்னுக்கு வருவான்?

ப: விநய முள்ளவன்.

கே: எவன் நஷ்டமடைவான்?

ப: கர்வமுள்ளவன்.

கே: எவனை நம்பக்கூடாது?

ப: எப்பொழுதும் பொய் சொல்பவனை.

கே: பொய் சொல்வது எப்போது பாபமல்ல.

ப: தர்மத்தை ரட்சிக்கச் சொல்லப்பட்ட பொய் பாபமல்ல.

கே: எது தர்மம்?

ப: நமது வம்சத்தில் பிறந்த பெரியோர்களில் அனுஷ்டானமுள்ளவர்கள் அனுஷ்டித்த தர்மமே நமக்கு தர்மம்.

கே: ஸாதுக்குப் பலம் யார்?

ப: தெய்வம்.

கே: ஸாது யார்?

ப: எப்பொழுதும் ஸந்துஷ்டியுடன் இருப்பவன், அழாதவன்.

கே: தெய்வம் என்பது என்ன?

ப: நீ செய்த நல்ல காரியமே.

கே: நல்வினை உடையவன் யார்?

ப: நல்லவர்களால் சிலாகிக்கப்படுகிறவன்.

கே: கிருஹஸ்தாச்ரமத்தில் மித்திரன் யார்?

ப: மனைவி.

கே: கிருஹஸ்தன் யார்?

ப: யஜ்ஞங்களைச் செய்கிறவன்.

கே: யஜ்ஞம் என்பது என்ன?

ப: செய்யப்பட வேண்டியது என்று வேதத்தால் எது விதிக்கப்பட்டு, நமக்கு சிரேயஸ்ஸைத் தருகின்றதோ அதுதான்.

கே: கர்மானுஷ்டானங்கள் எவனக்குப் பலிக்கும்?

ப: ஆசாரமுள்ளவனுகவும், சிஷ்டனுகவும் இருப்பவனுக்கு.

கே: யார் சிஷ்டன்?

ப: வேதத்தை ப்ரமாணமாக நம்பியவன்.

கே: எவன் இருந்தும் செத்தவன்?

ப: கர்மாக்களைச் செய்யாதவன்.

கே: எவன் தன்யன்?

ப: ஸங்யாஸி.

கே: எவன் பூஜிக்கப்படுகிறவன்?

ப: படித்து ஸாதுவாக இருப்பவன்.

கே: யாரை ஸேவிக்க வேண்டும்?

ப: வள்ளலை.

கே: வள்ளல் யார்?

ப: யாசிப்பவனுக்குத் திருப்திசெய்து வைப்பவன்.

கே: உடலெடுத்தோருக்குப் பெரிய பாக்யம் எது?

ப: ஆரோக்கியம்.

கே: பயன் எவனுக்குக் கிடைக்கும்?

ப: பிரயத்தனம் செய்கிறவனுக்கு.

கே: பாபம் யாருக்கு வராது?

ப: எப்பொழுதும் ஜபம் செய்கிறவனுக்கு.

கே: நிறைந்தவன் யார்?

ப: நல்ல பிள்ளைகளை உடையவன்.

கே: செய்யக் கஷ்டமானது எது?

ப: மனதை இடைவிடாது தடுத்துக் கட்டிப் போடுவதே.

கே: எவன் சரியான பிரம்மசாரி?

ப: ஊர்த்துவ ரேதஸுடையவன்.

கே: பரதேவதை யார்?

ப: ஞானரூபியான அம்பிகை.

கே: ஜகத்துக்குப் பர்த்தா யார்?

ப: சூரியன், (அன்னம் போடுகிறவன்.)

கே: ஜீவநத்திற்குக் காரணம் எது?

ப: மழை.

கே: சூரன் யார்?

ப: பயப்பட்டவனை ரட்சிக்கிறவன்?

கே: ரட்சிக்கிறவன் யார்?

ப: ஸத்குரு.

கே: ஜகத்குரு யார்?

ப: சம்பு.

கே: ஞானமெங்கிருந்து கிடைக்கும்?

ப: அவரிடமிருந்தே.

கே: மோக்ஷமெங்கிருந்து உண்டாகும்?

ப: முகுந்த பக்தியால்.

கே. முகுந்தன் யார்?

ப: அவித்தையைத் தாண்டி வைப்பவர்.

கே: அவித்யை என்பது என்ன?

ப: ஆத்மாவை மறப்பது.

கே: யாருக்குத் துக்கமில்லை.

ப: கோபமற்றவனுக்கு.

கே: ஸுகம் எது?

ப: உள் சிரிப்பு. (பல் சிரிப்பல்ல.)

கே: ராஜா யார்?

ப: இவனைப்போலில்லை என்று சொல்லப்படுகிறவன்.

கே: நாய் யார்?

ப: நீசனை (இழிவானவனை) ஸேவிப்பவன் —துர்ப்பாக்கிய முள்ளவன்.

கே: மாயையை அடக்கி ஆள்பவன் யார்?

ப: பரமேச்வரன்.

கே: இந்திரஜாலமெது

ப: பிரபஞ்சமே.

கே: சொப்பனம் போன்றதெது?

ப: ஜாக்கிராவஸ்தையிலுள்ள விவகாரம்?

கே: ஸத்யம் எது?

ப: பரப்ரம்மம்.

கே: மித்யை எது?

ப: அறிவினுல் நாசமாவது.

கே: துச்சம் எது?

ப: முயல் கொம்பு முதலியன.

கே: நிஜம் பொய் என்று சொல்ல முடியாதது எது?

ப: மாயை.

கே: அதனுல் கற்பிக்கப்படுவது என்ன?

ப: த்வைதம்.

கே: எது பாரமார்த்திகம்?

ப: அத்வைதம்.

கே: அஜ்ஞானம் எதனுல் உண்டாகிறது?

ப: அதற்கு ஆதியில்லே.

கே: உடம்புக்குப் போஷணே கொடுப்பது எது?

ப: பிராரப்தம் என்னும் கர்மா.

கே: அன்னத்தைக் கொடுப்பது யாது?

ப: ஆயுள்.

கே: பிராம்மணன் யாரை உபாஸிக்க வேண்டும்?

ப: காயத்ரி, சூரிய மண்டலம், அக்னி இவைகளில் கோசரமாகவுள்ள சம்புவை.

கே: காயத்திரி, சூரியன், அக்னி, சம்பு இவர்களிடத்திலுள்ளது என்ன?

ப: அந்த சிவ தத்வம்.

கே: பிரத்தியக்ஷ தேவதை யார்?

ப: தாயார்.

கே: பூஜிக்கவேண்டிய குரு யார்?

ப: தகப்பனுர்.

கே: ஸகல தேவஸ்வரூபி யார்?

ப: ஞான கர்மஸித்தியுடையுய பிராம்மணன்.

கே: குல நாசத்துக்குக் காரணம் எது?

ப: ஸாது ஜனங்களுடைய இருதயத்தில் தாபத்தை உண்டாக்கும் செய்கை.

கே: யாருடைய சொல் பலிக்கும்?

ப: ஸத்திய விரதம், மௌன விரதம்; க்ஷமை ஆகியவைகளையுடையவர்களின் சொல்.

கே: ஜன்மத்துக்குக் காரணம் யாது?

ப: விஷயத்தில் பற்று.

கே: மேல் ஜன்மம் எது?

ப: புத்திரன்.

கே: பரிஹாரம் செய்ய முடியாதது எது?

ப: யமன்.

கே: காலை எங்கே வைக்க வேண்டும்?

ப: கண்ணுக்குப் பரிசுத்தம் என்றுதெரிந்த இடத்தில்.

கே: அன்னதானத்திற்குப் பாத்திரன் யார்?

ப: பசியுள்ளவன்.

கே: யாரை அர்ச்சிக்க வேண்டும்?

ப: பகவத் அவதாரத்தை.

கே: பகவான் யார்?

ப: சங்கரனும்நாராயணனுமாகிய ஒரே மூர்த்தி.

கே: பகவத் பக்திக்குப் பலனெது?

ப: அவனுடைய லோக ஸாக்ஷாத்காரம்?

கே: மோக்ஷம் எது?

ப: அவித்யையை அழித்தல்?

கே: ஸகல வேதங்களுக்கும் உற்பத்தி (யும் (லயமும்)எது?

ப: ஓம்.

இந்தப் பிரச்னோத்ர ரத்னமாலையைக் கழுத்தில் (கருத்தில்) தரித்தவர்கள் முக்தாபரணங்கள் (முக்தர்களுக்குள் சிறந்தவர்) போல் நல்லோர் நிறைந்த ஸபைகளில் பிரகாசிப்பார்கள்.

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் அருளிய

பிரச்னோத்ர ரத்னமாலிகா

சம்பூர்ணம்

ஸ்ரீ

ஸ்ரீசங்கரபகவத்பாதர் அருளிய

பாலபோத ஸங்க்ரஹம்

தமிழில் அருளியவர்: ஸ்ரீ அனந்தானந்த ஸ்வாமிகள்

ஸ்ரீ சங்கர பகவ த்பா தா சா ரி ய ர் க ள், வேதாந்தத்தின் நுணுக்கமான கருத்துக்களை, ஸம்ஸ்கிருதத்தில் கம்பீரமான நடையில் பல பேரறிஞர்களும் போற்றிப் பயிலும்படியாக அருளியிருக்கிறார்கள்; சாமானிய மனிதர்கள் வேதாந்த அறிவைப் பெறுவதற்கு உதவியாக, மிகவும் எளிய நடையில் 'ஸ்ரீ பாலபோத ஸங்க்ரஹம்' இயற்றினார்கள். அன்பர்கள் படித்துப் பயனுற வேண்டுமென்ற கருத்துடன், இதைத் தமிழில் வெளியிடுகிறோம்.

அத்யாத்ம வித்யையை அடையும் முறையைத் தெரிவிக்கிறோம்.

ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆத்யாத்மிகம் என்னும் தாபத்ரயமாகிய அக்கினியினால் தகிக்கப் பட்டவனும், சகல சாதனங்களோடு கூடியவனுமான ஒரு சிஷ்யன் சம்சாரத்திலிருந்து விரக்தியடைந்தவனாய், குருவைச் சரணமடைந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விக்ஞாபனம் செய்து கொள்ளுகிறான்:

சிஷ்யன் : ஸ்வாமி, எனக்கு இந்தச் சம்சாரத்திலிருந்து நிவிருத்தி (விடுதலை) ஏற்படும்படி அநுக்கிரகிக்கவேண்டும்.

(புலி, சிங்கம் முதலிய துஷ்ட ஜந்துக்களால் ஏற்படும் துக்கம் ஆதி பௌதிகம் எனப்படும். இடி புயல், அதிக உஷ்ணம், குளிர், பூதபிசாசங்களால் ஏற்படும் துக்கம் ஆதிதைவிகம் எனப்படும். ஜ்வரம், தலைவலி இம்மாதிரி சரீரத்தின் ஸ்திதி மாறுதலினுல் சரீரத்தில் ஏற்படும் கஷ்டங்கள் ஆத்யாத்மிகம் எனப்படும்.)

குரு : ஹே சிஷ்ய ; உனக்குச் சம்சார நிவிருத்தி என்பது ஞானத்திஞல்தான் ஏற்படும். சிரவண, மனன, நிதித்யாஸனங்களிஞல் ஞானம் ஏற்பட்டு அதனுல் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும்.

சிஷ்யன் : சிரவணம் என்ருல் என்ன? மனனம் என்ருல் என்ன? நிதித்யாஸனம் என்ருல் என்ன ? ஸாக்ஷாத்காரம் என்ருல் என்ன ?

குரு : குழந்தாய், சிரவணம் என்ருல் உபக்ரமம் (ஆரம்பம்), உபஸம்ஹாரம் (முடிவு) இவைகளின் ஒற்றுமை முதலிய தாத்பரியலிங்கங்களை அறிந்துகொள்வதற்கு ஸாதனங்களான வழிகளின் மூலம் ஸாதன சதுஷ்டய சம்பன்னனுனவன் வேதாந்த வாக்கியங்களின் பொருளைக் கேட்டு அறிந்துகொள்வது. தாத்பர்யத்தை அறிந்துகொள்வதற்கான சாதனங்கள் ஷட்லிங்கங்கள் என்று சொல்லப்படும். அவையாவன: (1) உபக்ரம

உபஸம்ஹார ஐகரூப்யம், (2) அப்யாஸம், (3)அபூர்வதை, (4) பலம், (5) அர்த்த வாதம், (6) உபபத்தி.

ஆரம்பத்தில் சொன்னதையே முடிவிலும் சொல்வது என்பது உபக்ரம உபஸம்ஹார ஐகரூப்யம் என்னும் முதலாவது லிங்கம். ஒரு விஷயத்தைப் பற்றியே திருப்பித் திருப்பிச் சொல்வது அப்யாஸம் என்னும் இரண்டாவது லிங்கம். இந்த விஷயத்திற்கு இதர ப்ரமாணங்களின் அவசியமில்லாமல் வேதாந்தங்களில் தானே தெரிகிறது என்று சொல்லுவது அபூர்வதை என்னும் மூன்ருவது லிங்கம். இந்த விசாரம் பண்ணிஞல் இந்தப் பிரயோஜனம் ஏற்படும் என்று சொல்வது பலம் என்னும் நான்காவது லிங்கமாகும். ஒரு விஷயத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசுவது அர்த்தவாதம் என்னும் ஐந்தாவது லிங்கம். அநேக திருஷ்டாந்தங்களிஞல் ஒன்றை ஸ்தாபிப்பது உபபத்தி என்னும் ஆருவது லிங்கமாகும்.

மனனம் என்ருல் சிரவணத்திஞல் கேட்டறிந்துகொண்ட விஷயங்களே அப்படி இருக்க முடியுமா என்று யுக்தியிஞல் விசாரம் செய்வது. மனனத்திஞல் திடமாக ஏற்பட்ட விஷயத்தில் மனத்தை ஏகாக்ரமாய் நிறுத்தி, அதில் ஒருவிதமான சம்சயமுமில்லாமல் ஒரே ஸ்திதியில் மனத்தை நிற்கும்படிச் செய்வது நிதித்யாஸனம் எனப்படும். இம்மாதிரி மனத்தை ஒரே இடத்தில் நிலேத்திருக்கும்படிச் செய்வது பலிதமாஞல் அதன்

பலமே ஸாக்ஷாத்காரம். இந்த விஷயத்தில் ச்ருதியே, "சுத்தப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் ஒருவனுக்கு ஆகிவிட்டால் அவனுடைய ஹ்ருதயத்திலுள்ள முடிச்சுகள் அவிழ்ந்து விடுகின்றன. எல்லாச் சந்தேகங்களும் சேதிக்கப் பட்டுவிடுகின்றன. அவனுடைய கர்மாக்கள் எல்லாம் நசித்துப் போய் விடுகின்றன" என்று கூறுகிறது.

சிஷ்யன்: ஸ்வாமி, ஸாதன சதுஷ்டயம் என்றால் என்ன?

குரு: நித்யாநித்யவஸ்து விவேகம், இஹாமுத்ர பலபோக விராகம், சமாதிஷட்க ஸம்பத்தி; முமுக்ஷுத்வம் இந்நான்கும் ஸாதன சதுஷ்டயம் எனப்படும்.

நித்யாநித்யவஸ்து விவேகம் என்றால், 'ஆத்ம வஸ்து ஒன்றுதான் நித்யம் (எக்காலத்திலும் இருப்பது), பார்க்கப்படுபவையெல்லாம் அதற்கு விபரீதமானவை, அதாவது அநித்யமானவை' என்று புருஷனுக்கு நிச்சயம் ஏற்படுவதே நித்யாநித்ய விவேகம் எனப்படும்.

இஹாமுத்ர பலபோக விராகம்:—பிரம்மாதி ஸ்தாவராந்தம் எல்லா விஷயங்களிலும் காக்கையின் மலத்தைக் கண்டால் ஏற்படும் வெறுப்பைப் போல் நிர்மலமான வெறுப்பே இகாமுத்ர பலபோக விராகம் எனப்படும்.

ஸமாதிஷட்க ஸம்பத்தி என்றால் சமம், தமம், உபரதி, திதிக்ஷை, ச்ரத்தை, ஸமாதி இந்த ஆறும் சேர்ந்து ஸமாதிஷட்கம் எனப்படும்.

சமம் என்ருல் எப்போதும் எல்லாவித வாஸனைகளையும் தியாகம் செய்து இருத்தல்.

தமம் என்ருல் வ்ருத்திகள் (புலன்கள்) வெளியில் செல்லாமல் அவைகளை அடக்குதல்.

உபரதி என்ருல் விஷயங்களிலிருந்து (ஆசை) மனத்தைத் திருப்புவது.

திதிக்ஷை என்ருல் எப்பேர்ப்பட்ட துக்கங்கள் வந்தாலும் அவைகளைச் சகிக்கும் தன்மை.

ச்ரத்தை என்பது வேதத்திலும் ஆசார்யர்களுடைய வார்த்தைகளிலும் வைக்கும்பக்தியே **ச்ரத்தை.**

சமாதானம்: தன்னுடைய ஒரு குறிப்பிட்ட லஷ்யத்திலேயே சித்தத்தை ஏகாக்ரப்படுத்தி நிறுத்துதலே சமாதானம்.

இந்த ஆறும் சேர்ந்து ஸமாதிஷட்கம் எனப்படும்.

முமுக்ஷுத்வம்: நான் படும் சம்சார துக்கத்திலிருந்து நிவிருத்தி ஏற்பட்டு எப்போது மோக்ஷம் கிடைக்கும் என்ற திடமான புத்தியே **முமுக்ஷுத்வம்.**

இம்மாதிரி சாதன சதுஷ்டயங்களோடு கூடினவனுக்கே ப்ரஹ்மாத்மைக்ய ஞானத்தில் அதிகாரம் உண்டு. விசாரம் இல்லாவிடில் ப்ரம்மாத்மைக்ய ஞானம் ஏற்படாது. ஆகையினுல் விசாரம் அவசியம் செய்ய வேண்டும்.

சிஷ்யன்: விசாரம் என்ருல் என்ன?

குரு: 'நான் யார்? எனக்கு எதிரில் காணப்படுகிறதே, இதெல்லாம் எப்படி உண்டாயிற்று? எங்கு லயத்தை அடைகிறது?' என்று எக்காலமும் சாதுக்களுடன் (பெரியோர்களுடன்) விசாரிப்பதே விசாரம் எனப்படும்.

சிஷ்யன்: ஸ்வாமி; எனக்கு விசாரம் என்பது தெரியாது. சாதுக்கள் எங்கு இருக்கிறார்களோ அதுவும் தெரியாது. தாங்களே தங்களது கருணை கடாக்ஷமாகிற ஓடத்தினால் இந்தச் சம்சாரமென்னும் சமுத்திரத்திலிருந்து கரையேறும் வழியை எனக்குக் காண்பிக்க வேண்டும்.

குரு: குழந்தாய், என்னிடத்தில் உனக்கு திடமான பக்தி இருக்கும் பக்ஷத்தில் நான் சொல்வதைக் கவனமாய்க் கேள். நீ இந்தத் தேகமல்ல. ஏனெனில் இது ஜடமாயும் உன்னால் பார்க்கப்படுவதாயும் இருக்கிறது. பார்க்கப்படுவதைவிட, பார்ப்பவன் வேறு என்பது நியாயம். தவிரவும் இந்தத் தேகம் அமங்களமானது, அநித்யமானது; விகாரங்களுடன் கூடியது. ஆகையினால்தான் நீ இந்தத் தேகத்தில் இல்லை. நீ சைதன்ய ஸ்வரூபன்.

சிஷ்யன்: ஸ்வாமி, நான் தேகம் இல்லையென்றால் தேகத்திற்கு ஏற்படும் சுகதுக்கங்கள் என்னைப் பாதிக்கின்றனவே! ஆகையினால் நான் இந்தத் தேகமாய்த்தான் இருக்க வேண்டும்.

குரு: தேகம் என்பது ஜடம்.

சிஷ்யன்: தேகம் எப்படி ஜடமாகும்? பால்யம் முதல் இந்தச் சரீரம் ஒவ்வொரு நாளும் விருத்தி

யடைந்து வருகிறதே. ஜடமாக இருந்தால் எப்படி விருத்தி யடையும்? இப்படியேதான் எல்லாம்.

குரு: ஹே சிஷ்ய! தேகத்துடன் நீ தாதாத்ம்ய பாவத்தை (அதுவாக இருக்கும் தன்மையை) அடைவதனுல்தான் சுகம் துக்கம் இவை தோன்றுகின்றன. எப்படி என்ருல் சொல்லுகிறேன் கேள். தனம் நஷ்டமானுல் துக்கம் ஏற்படுகிறது. தனம் முதலியவை கிடைத்தால் சுகம் ஏற்படுகிறது. அதனுல் திரவியமே ஆத்மாவாக ஆகுமா? அது சுகதுக்கங்களுக்குக் காரணமாக ஆகிறது. எப்படி லாபாலாபத்துடன் சம்பந்தப்படுவதால் சுகமும் துக்கமும் ஏற்படுகின்றனவோ அதேபோல் சுகதுக்கத்துடன் தாதாத்ம்யத்தை அடைவதனுல் சுகமும் துக்கமும் உண்டாகின்றன. திரவியம் முதலியவைகளைக் காட்டிலும் அதை அநுபவிப்பவன் எப்படி வேருனவனோ அப்படியே தேகத்தைக் காட்டிலும் (தேகத்தையுடைய) நீ வேருனவன் தான். ஜடத்வத்தைப்பற்றிச் சொல்லுகிறேன் கேள். தேகம் வளருகிறது என்ற காரணத்தைக் கொண்டு தேகத்தை எப்படி ஜடமென்று சொல்லலாம் என்று கேட்கிருயல்லவா? இது சரியானதல்ல. இது அஸத், ஜடத்திற்கும் விருத்தி ஏற்படும். மணலால் ஆகும் ஒரு வேதிகையில் மேலும் மேலும் மண்ணைச் சேர்க்கச் சேர்க்க அது மேலும் உயர்ந்து ஒரு மேடாக ஆகிறது. அதனுல் மாத்திரம் மிருத்திகை ஜடமல்ல, சைதன்யத்தையுடையது என்று சொல்லலாமா? அப்படியே அன்னமயமான இந்தச் சரீரத்தில் மேலும் மேலும் அன்னத்தைப் போட்டுக்

கொண்டே இருந்தால் இந்த சரீரமும் விருத்தியடை கிறது. விருத்தியடைகிறது என்ற ஒரு காரணத் தால் மாத்திரம் அது ஜடமல்ல என்று சொல்ல முடி யாது. தேகம் ஜடம்தான். அது எப்படி அமங்களம் என்பதை விளக்குகிறேன். கேட்பாயாக. (முதல் முதலில்)அதுஜனனம்எடுப்பதை யோசித்துப்பார்த் தாலே தேகத்தின் அமங்களத் தன்மை நன்கு புலப் படும் பார்க்கப்படுதல் என்பது எப்படி என்ருல், என்னுடைய சரீரம் கறுப்பாயிருக்கிறது, வெண் மையாய் இருக்கிறது என்று சொல்லும்போதும், என் சரீரம் ஸ்தூலமாய் (பெருத்து) இருக்கிறது. க்ருசமாய் (இளைத்து)இருக்கிறது, என்று சொல் லும்போதும் அதைப் பார்க்கப்படுதல் என்பது ஏற்படுகிறது. அவைகளை அப்படிப் பார்க்கிற நீ த்ரஷ்டா (பார்ப்பவன்) ஆகிருய். அநித்தியம் என் பது எப்படி என்ருல் இந்தச் சரீரத்துக்குப் பிறப்பும் இறப்பும் ஏற்படுவதால் இது அநித்தியமாகிறது. விகாரத் தன்மையுடையது என்பது எப்படி என்ருல், இந்தச் சரீரத்திற்கு, பால்யம், யௌவனம், வார்த்தக்யம் (மூப்பு)முதலிய மாறுதல்கள்ஏற்படு கின்றன. சரீரம் விகாரத்தன்மையுடையதாக ஆகி றது. நீயோ என்ருல் எந்தவிதமான விகாரங்கள் அதாவது மாறுதல்களும் இல்லாமல் எப்போதும் ஒரே மாதிரியாய் எப்போதும் அதாவது எல்லாக் காலத்திலும் (நித்தியமாய்) இருப்பவனுக இருக்கி ருய். பால்யத்தில்க்ரீடாஸக்தனுயும், விளையாட்டில் விருப்ப முள்ளவனுயும் யௌவனத்தில் விஷயாஸக் தனுயும் (இன்பங்களை நுகர்பவனுயும்) வார்த்தக்யத்

தில் (வயோதிகத்தில்) அநேக விதமான சிந்தனை கள் (கவலைகள்) உடையவனாயும் இருந்தேனே அதே இந்த நான்தான் எப்பொழுதும் இருப்பவன் என்று அநுபவிக்கிறாய். அதை யோசிக்கும்போது ஒரு காலத்தில் இருந்த அவஸ்தை (அநித்தியமாய்) எப்போதும் இல்லாத தாக ஆகி ஓர் அவஸ்தை மாறி இன்னோர் அவஸ்தை வருகிறது. ஆகையால் இந்த அவஸ்தைகளுக்கு உள்ளாவது இந்த தேகமே தவிர நீயல்ல. நீ சித்ஸ் வரூபியாய் இம்மூன்று அவஸ்தைகளுக்கும் சாக்ஷி யாக இருக்கிறாய்.—அந்த அவஸ்தைகளைப் பார்ப் பவனாக இருக்கிறாய்.

சிஷ்யன் : ஸ்வாமி! தங்கள் அநுக்ரகத்தால் நான்இந்தஸ்தூல சரீரம் அல்ல என்பதை அறிந்து கொண்டேன். இது சத்தியம். தங்கள் அநுக்கிர கத்தாலேயே இந்த ஸ்தூல சரீரத்தை ஒட்டி ஏற் படுகிற வர்ணாச்ரமங்கள், ஸ்த்ரீ புருஷன், கறுப்பு வெளுப்பு என்ற பேதம், நாமம் ரூபம் முதலியவை களும் எனக்கு இல்லை என்பதையும் அறிந்து கொண்டேன். ஆனால் இவைகளைக் காட்டிலும் வேறாக இருக்கும் இந்திரியங்களாக நான் இருக் கிறேன் என்று தோன்றுகிறது. இந்திரியங் களின் வியாபாரங்களினாலேயே பார்க்கிறேன், கேட்கிறேன், தொடுகிறேன். இந்த அநுபவங்கள் ஏற்படுவதால் அந்த இந்திரியங்கள்தானே நான்.

குரு: குழந்தாய், இந்திரியங்களும் ஜடங்களே. நீ ஜடமான இந்திரியங்கள் அல்ல. அவை பஞ்ச பூதங்களின் காரியங்கள்.

சிஷ்யன் : இந்திரியங்கள் எப்படிஜடமாகும்? அவைகளை எப்படிப் பூதங்களின் சேர்க்கையினுல் உண்டானவை எனலாம் ?

குரு : குழந்தாய், இந்திரியங்களுக்கு ஆத் மாவை அறியும் சக்தி இல்லை. அவை ஆத்மாவை அறியா. வேறு ஒன்றையும் அறியும் சக்தியு மில்லை; விளக்கைப் போல. 'காதே, இப்போது நீ எங்கே இருக்கிருய்?' என்று கேட்டால், 'நான் இங்கு இருக்கிறேன் ஸ்வாமி' என்று சொல்லும் சக்தி அதற்குக் கிடையாது. இப்படியேதான் எல்லா இந்திரியங்களுக்கும். ஆகையினுல்தான் அவை ஜடங்கள் என்று சொல்லப்படுகின்றன. அவை எப்படிப் பஞ்சபூதங்களின் காரியங்களா கின்றன என்பதைச் சொல்லுகிறேன், கேள்.

ச்ரோத்ரேந்திரியம் என்பது பஞ்சபூதங்களில் ஒன்ருன ஆகாசத்தின் காரியம். ஆகாசத்தின் ஆத்யாத்ம குணமான சப்தத்தை அறிவதற்கு அது சாதனமாகிறது. அப்படியே த்வகிந்திரியம் வாயு என்னும் பூதத்தின் காரியமாய் வாயுவின் ஆத்யாத்ம குணமாக இருக்கும் ஸ்பர்சத்தைக் கிரகிக்கச்சாதனமாகிறது. சக்ஷுரிந்திரியம் கண் கள் தேஜஸ் என்னும் பூதத்தின் காரியமாகி அதன் ஆத்யாத்ம குணமான ரூபத்தைக் கிரகிப் பதற்குச் சாதனமாறது. ரஸனேந்திரியம் அப் என்னும் பூதத்தின் காரியமாகி அதன் ஆத் யாத்ம குணமானரசத்தை அறியச் சாதனமா கிறது. ஞானேந்திரியம் பிருத்வி என்னும் பூதத் தின் காரியமாகி அதன் ஆத்யாத்ம குணமாகிய

கந்தத்தை அறியச் சாதனமாகிறது. இப்போது சொன்ன இவ்வைந்து (ச்ரோத், த்வக், சக்ஷுஸ், ரஸ , க்ராணம் என்னும்) இந்திரியங்களும் ஞானேந்திரியங்கள் எனப்படும். இவை பஞ்சபூதங் களின் ஸத்துவாம்சத்திலிருந்து உண்டானவை. இனி, கர்மேந்திரியங்களைப்பற்றிச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

வாக் என்னும் இந்திரியம், ஆகாசம் என்னும் பூதத்தின் காரியமாகி ஆகாயத்தின் ஆத்யாத்ம குணமான சப்தத்தை உண்டாக்கு கிறது (உச்சரிக்கிறது). பாணி என்னும் இந்திரி யம், வாயு என்னும் பூதத்தின் காரியமாய் அந்த வாயு பூதத்தின் ஆத்யாத்ம குணமான ஸ்பர்சத் தைக் கிரகிக்கிறது; கொடுக்கவும் கொடுக்கிறது. பாதம் என்னும் இந்திரியம், தேஜஸ் என்னும் பூதத்தின் காரியமாகி,அந்தப் பூதத்தின் ஆத்யாத்ம குணமான போதல் (நடத்தல்) முதலியவைகளைச் செய்கிறது. குஹ்யேந்திரியம் அப் என்னும் பூதத் தின் காரியமாகி அந்தப் பூதத்தின் ஆத்யாத்ம குணமான மூத்திரம், ரேதஸ் முதலியவற்றை வெளியிடுகிறது. குதம் என்னும் இந்திரியம், பிருத்வி என்னும் பூதத்தின் காரியமாகி, அந்தப் பூதத்தின் குணமான மலம் முதலியவற்றை வெளி யாக்குகிறது. இம்மாதிரி மேலே சொன்ன—(வாக், பாணி, பாதம், குஹ்யம், குதம் என்னும்)—ஐந்து இந்திரியங்களும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரி யத்தைச் செய்வதனுல்; கர்மேந்திரியங்கள் என்று சொல்லப்படுகின்றன. இவை பஞ்சபூதங்களின்

ரஜோகுண அம்சத்திலிருந்து உண்டானவை. பஞ்ச பூதங்களின் தமோகுணங்களிலிருந்து உண்டானவை (சப்த ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்த,) வசனம்-பேசுதல், ஆதானம்—கொடுத்தல், எடுத்தல், கமனம் — போதல், விஸர்க்கம் — விடுதல், ஆனந்தம் இவை. இந்த எல்லா இந்திரியங்களும் ஜடங்களாக இருந்துகொண்டு அதன் அதன் தேவதையின் அநுக்கிரகத்தினுல் அதன் அதன் விஷயங்களில் பிரவர்த்திக்கின்றன.

சிஷ்யன் : எந்த எந்த இந்திரியத்துக்கு எதெது தெய்வம் ?

குரு : ச்ரோத்ரேந்திரியத்துக்கு, திக்குகள் அதிதேவதை. த்வகிந்திரித்துக்கு, வாயு அதிதேவதை. சக்ஷுரிந்திரியத்துக்குச் சூரியன் அதிதேவதை. ரஸனேந்திரியத்துக்கு வருணன் அதிதேவதை. ஞானேந்திரியத்துக்கு அச்வினிதேவதைகள் அதிதேவதைகள். வாகிந்திரியத்துக்கு அக்கினி அதிதேவதை. பாணீந்திரியத்துக்கு இந்திரன் அதிதேவதை. பாதேந்திரியத்துக்கு விஷ்ணு அதிதேவதை. பாயுரிந்திரியத்துக்கு ம்ருத்யு அதிதேவதை. குஹ்யேந்திரியத்துக்கு ப்ரஜாபதி அதிதேவதை. இப்படியே ச்ரோத்ரேந்திரியத்துக்குக் கேட்பது என்பது அதிபூதம் (அதிபூதகாரியம்). நேத்ரேந்திரியத்துக்குப் பார்ப்பது என்பது அதிபூதம். த்வகிந்திரியத்துக்கு ஸ்பர்சம் அதிபூதம். ரஸனேந்திரியத்துக்கு ருசியை அறிதல் என்பது அதிபூதம். க்ராணேந்திரியத்துக்கு, கந்தம் (வாசனை) அதிபூதம். வாகிந்திரியத்துக்குப் பேசு

தல் அதிபூதம், பாணீந்திரியத்துக்குக் கொடுத்தல் அதிபூதம். பாதேந்திரியத்துக்கு அதிபூதம் நடத்தல் போவது, வருவது. பாயுரிந்திரியத்துக்கு அதிபூதம் விஸர்க்கம் (விடுதல்). உபஸ்தேந்திரியத்துக்கு அதிபூதம் சுகம். எல்லா இந்திரியமும் அதன் அதன் அதிதேவதையின் அநுக்கிரகத்தால் அதன் அதன் விஷயத்தை அறிகிறது—காரியத்தைச் செய்கிறது. ஆகையினுல் இந்த இந்திரியங்கள் ஜடங்களே, நீ அந்த இந்திரியங்களல்ல.

சிஷ்யன் : ஸ்வாமி, இந்திரியங்கள் உண்மையில் ஜடங்களே என்னும் ஞானம் எனக்கு ஏற்பட்டு விட்டது. இதர இந்திரியங்களைக் காட்டிலும் வேருக மனம் ஒன்று இருக்கிறதே, அதுதான் நான். மனம் சரியான நிலையில் இருந்தால்தான் பார்க்கிறேன், கேட்கிறேன். மனம் சரியான நிலையில் இல்லாவிட்டால் பார்ப்பதுமில்லை, கேட்பதுமில்லை. ஆகையினுல் அந்த மனம்தான் நான் என்று நினைக்கிறேன்.

குரு : குழந்தாய், நீ எப்படி மனம் ஆவாய் ? என் மனம் இப்போது சரியான நிலையில் இருக்கிறது என்று நினைக்கிருய்—சொல்லுகிருய். அந்த மனத்தைக் காட்டிலும் அதை அறிகிற நீ வேருனவன் இல்லையா ? மனம் உன்னுல் அறியப்படுகிறது. மனத்தை அறிகிறவன் நீ. மனம் உன்னுடைய வசத்தில் இருக்கிறது. ஆகையால் நீ அந்த மனமாகமாட்டாய்.

சிஷ்யன் : ஸ்வாமி, நிஜமாக நான் மனமாக இல்லை. புத்தியினுல் நிச்சயிக்கப்பட்ட விஷயத்தில்

தான் மனம் பிரவர்த்திக்கிறது. ஆகையினுல் நான் புத்தியாக இருக்கிறேன்.

குரு : புத்தியும் அந்தக்கரணத்தின் விருத்தி தான். ஆகையினுல் நீ புத்தியுமல்ல.

சிஷ்யன் : ஸ்வாமி, இவையெல்லாம் நான் அல்ல; காரணம் அவை என்னுல் பார்க்கப்படுபவையாக இருப்பதால், ஆகையினுல் நான் பிராணன் என்று நினைக்கின்றேன். பிராணன் இருப்பதால் தான்பார்க்கிறேன், கேட்கிறேன்.பிராணன் இல்லாவிடில் பார்ப்பதுமில்லை, கேட்பதுமில்லை, ஆகையினுல் நான் பிராணனுகத்தான் இருக்கிறேன்.

குரு : குழந்தாய், நீ பிராணனும் அல்ல; காரணம் அதுவும் ஜடமாக இருப்பாதே.

சிஷ்யன் : பிராணன் எப்படி ஜடமாகும்?

குரு : சொல்கிறேன், இரவில் தூங்கும் புருஷனுடைய வஸ்துக்களைத் திருடன் அபகரித்துக் கொண்டு போய்விடுகிறுன். தூங்கும் சமயத்திலும் பிராணன் இருக்கத்தான் இருக்கிறது. ஆனுல் திருடிக்கொண்டு போனது ஏன் அவனுக்குத் தெரியவில்லை? பிராணனும் ஜடமாக இருப்பதனுல் தான். ஆகையால்தான் பிராணன் ஜடமாக இருக்கிறது என்றேன்.

சிஷ்யன் : ஸ்வாமி, பிராணன் ஜடமென்ருல் ஜடமான சரீரம் எப்படிச் சேஷ்டிப்பிக்கிறது— உணர்ச்சி கொள்கிறது? ஜடத்துக்குச் சேதனத்வம் (உணர்ச்சி) இல்லையே?

குரு : சொல்லுகிறேன் கேள். உலகத்தில் ஜடமாக இருப்பவைகளிடத்து அசையும் தன்மை காணப்படுகின்றது. எப்படி என்ருல், சண்டமாருதம் அடிக்கும் போது அது வீட்டின் மேலுள்ள திருணங்கள் (தூசிகள்) முதலியவற்றை ஆகாயத்தில் சுற்றச் செய்து வேறு இடத்தில் அவற்றைக் கொண்டுபோய்ப் போட்டுவிடுகிறது. இம்மாதிரியே பிராணனுக்கும் தேகத்தைச் சேஷ்டிக்கும் தன்மை உண்டு. ஆகையினுல்தான் நீ பிராணன் அல்ல என்று சொல்லுகிறேன்.

சிஷ்யன் : தங்கள் ஆக்ஞையால்(அநுக்கிரகத்தால்) இவை எல்லாம் நான் அல்ல என்று தெரிந்து கொண்டேன். இப்படி அறிந்துகொண்டதனுல் எனக்கு என்ன பயன் ஏற்படுகிறது ?

குரு : ஹே சிஷ்ய, நான் சொல்வதைச் சாவதானமாய்க் கேள். இவை 17-ஆம் லிங்கசரீரம் எனப்படும். எப்போது இவை யெல்லாம் நீ அல்ல என்று தெரிந்து கொண்டு விட்டாயோ அப்போது தேவதிர்யக் மனுஷ்யாதி முதலியவைகளில் உனக்கு ஜன்மம் இல்லை. எப்படிமுழங்கால் முறிந்த நொண்டிக்கு நடப்பது போவது வருவது என்பவை இல்லையோ அதுபோல.

சிஷ்யன் : ஸ்வாமி, தங்கள் அநுக்கிரகத்தினுல் பஞ்சபிராணன்கள், மனம், புத்தி ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் ஆகியவை இந்த 17-ஆம் அபஞ்சிக்ருதமானபூதங்களிலிருந்து ஏற்பட்டவை. இவை போக சாதனங்கள், நான் இவை அல்ல என்

பதை அறிந்து கொண்டேன். ஆனால் நான் யார் என்று நான் அறிந்து கொள்ள வில்லையே-நான் யாரென்று எனக்குத் தெரிய வில்லை. தாங்கள் என்மேல் கிருபை செய்து அதை எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

குரு : ஹேசிஷ்ய, இதுதான் உன்னுடைய காரண சரீரம். எப்படி என்றால், எல்லாவற்றையும் அறிகிறேன். ஆனால் என்னை மாத்திரம் நான் அறியவில்லை என்று சொல்கிறாய். இதுதான் - அறியவில்லை என்னும் அஞ்ஞானந்தான் - ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களுக்குக் காரணமாதலால் இது காரண சரீரம் என்று சொல்லப்படுகிறது. இது தான் அவித்யை. அவித்யைதான் சம்சாரமாகிற அனர்த்தத்தை ஏற்படுத்துகிறது. ப்ரஹ்மாத்மைக்ய ஞானத்தைத் தோன்றவிடாமல் மறைக்கிறது. இந்த அஞ்ஞானத்தின் - அவித்யையின் - நிவ்ருத்தியே முக்தி. முமுக்ஷுக்கள் பிரயத்தனம் செய்து அந்த அஞ்ஞானத்தைப் போக்கடிக்க வேண்டும்.

சிஷ்யன் : ஸ்வாமி, அஞ்ஞானத்தைப் போக்கடிப்பது எப்படி ?

குரு : சிஷ்ய, நீயே "நான் என்னை அறியவில்லை" என்று சொல்லுகிறாய் அல்லவா? உன்னைக் காட்டிலும் வேறு யாராவது அவ்வாறு கூறுகிறார்களா? சொல்லுகிறவனும், பார்க்கிறவனும் கேட்பவனும் நீயேதான்.

சிஷ்யன் : இந்த விஷயத்தில் ச்ருதிப்ரமாணம் இருக்கிறதா?

குரு: அடே குழந்தாய் எல்லா வேதாந்தங்களின் கருத்தும் இதுதான். ச்ருதிப் பிரமாணம் சொல்லு கிறேன், கேட்பாயாக. இதைக்காட்டிலும் சொல் வது (பேசுவது) வேறு ஒன்றும் கிடையாது. அப் படியே இதைத் தவிர நினைக்கிற வஸ்து வேறு ஒன்றுமில்லை. இதைத் தவிரப் பார்க்கிற வஸ்து வேறு ஒன்றும் கிடையாது என்று வேதங்கள் முறையிடுகின்றன. எதனுல் பேசுகிருனே, எத னுல் கேட்கிருனே (அது இந்த ப்ரஹ்மம்தான்) என்று அநேக ச்ருதி ப்ரமாணங்கள் இருக்கின்றன. மூன்று இடங்களிலும் (பூலோகம், புவர்லோகம். ஸுவர்லோகம்), ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்னும் மூன்று அவஸ்தைகளிலும் அனுபவிக்கிற னுகவும், அநுபவமாகவும், அநுபவிக்கப் படுவதாகவும் எது இருக்கிறதோ, அவைகளைக் காட்டிலும், இவைகளுக்கு விலக்ஷணமாக, அதா வது புறம்பாக, இவைகளுக்கெல்லாம் ஸாக்ஷியாக சின்மாத்ர ஸ்வரூபமான சதாசிவன் நான். ஸ்ம்ருதி யிலும் (பகவத்கீதையிலும்) என்னை க்ஷேத்ரக் ஞனுகவும் தெரிந்துகொள் என்றும், "சர்வ பூதங் களுக்கும் ஆத்மாநான்" என்றும் சொல்லப்பட்டிருக் கிறது. விஷ்ணு புராணத்தில், "காணப்படும் இவை எல்லாமும், வாசுதேவனுயும் பரமபுருஷனு யும் இருப்பது எல்லாம் ஒன்றே" என்றும், 'அனந் தமான பகவானிடத்தில் சுத்தமான பாவம் (எண் ணம்) எவர்களின் ஹ்ருதயத்தில் இருக்கிறதோ அவர்களைத் தூரத்தில் விட்டுவிட்டுப் போய்விடு.

அவர்கள் சமீபத்தில்கூடச் செல்லாதே' என்று யமதர்மராஜன் தன்னுடைய தூதர்களைப் பார்த்துச் சொல்லுகிறான்'' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சிஷ்யன் : ஸ்வாமி, தங்களுடைய அநுக்கிரகத்தாலே நான் இந்தத் தேகமல்ல என்ற ஞானம் எனக்கு ஏற்பட்டு விட்டது. ஆனால் இந்த ஞானம் ஏற்பட்டதனால் என்ன லாபம்?

குரு : எப்போது பஞ்சீக்ருத பஞ்ச மகாபூதங்களின் சேர்க்கையால் ஏற்பட்ட இந்த ஸ்தூல சரீரம் நீ இல்லையோ, அப்படியே இந்த ஸ்தூல சரீரத்தைக் கொண்டு ஏற்படுகிற நாமம், ரூபம், ஜாதி, வர்ணம், ஆச்ரமம் முதலியவையும் (உண்மையில்) இல்லாமல் போய்விடும். இந்த நாமம், ரூபம், ஜாதி முதலியவை இந்த ஸ்தூல சரீரத்துக்கே தவிர, அதைக் காட்டிலும் வேறாக இருக்கும் உனக்கு அல்ல.

இந்த விஞ்ஞானத்துடன் ஸர்வாத்மராமனாய் எவன் ஒருவன் இருக்கிறானோ அவனே பிரம்மன், அவனே சிவன், அவனே ஹரி, அவனே இந்திரன், அவனே அக்ஷர ஸ்வரூபியான பரப்ரம்மமாக ஸ்வராட்டாக இருக்கிறான்.

காணப்படும் ஜ்யோதிகளெல்லாம் விஷ்ணுவே. சகல புவனங்களும் விஷ்ணுவே. காடுகளும் விஷ்ணுவே. மலைகளும் விஷ்ணுவே. நதிகள், சமுத்திரங்கள் இவையெல்லாம் விஷ்ணுவே. விஷ்ணு

வைக் காட்டிலும் வேருன தனி வஸ்து ஒன்றுமே கிடையாது.

குரு இவ்விதம் உபதேசிக்கவே சிஷ்யன் இந்த அநுபவத்தை அடைந்தவனுய் இருந்துகொண்டு, தான் அநுபவிக்கும் நிலேயைச் சொல்லுகிருன்:-

பாவத்துக்கு இடமில்லே. புண்ணியத்துக்கும் இல்லே. பத்தனுய் இருக்கும் தன்மையுமில்லே. முக்தனுயிருக்கும் தன்மையுமில்லே. குறைவுள்ள வனுமல்ல, குறைவில்லாமல் நிறைவுள்ளவனுமல்ல. மனமே, ஏன் வீணுகப் புலம்புகிருய்? உண்மையில் எல்லாம் சமமே. நான் எனக்கே நமஸ்காரம் செய் கிறேன். ஒருவராலும் எட்ட முடியாத சரீரத்தை (ஸ்வரூபத்தை, உடையவனுய் எல்லாவற்றையும் தரிக்கிறவனுன எனக்குச் சமமானவன் வேறு ஒரு வனுமில்லே. அளவிடமுடியாத சுகசமுத்திரமா யும் ஞானசமுத்திரமாயும் இருக்கிற என்னிடத்தில் அநேகமாயிரம் பிரம்மாண்டங்களான நீர்க்குமிழி கள் மாயாமயமான காற்றில் உண்டாகி மறுபடி யும் மறுபடியும் மறைந்து போகின்றன.(நாசத்தை அடைகின்றன) தேவதைகளே உத்தேசித்துக் கொடுக்கப்படும் ஹவ்யமும்,—பித்துருக்களே உத் தேசித்துக் கொடுக்கப்படும் கவ்யமும்,—விலக்கக் கூடியது சேர்த்துக்கொள்ளக் கூடியது என்று சொல்லப்படுகிற தன்மையற்றவனும் நான். நானே ஹரியாக இருக்கிறேன். ஹரனுயும் பிரம்மாவாயும் இருப்பவனும் நான்தான். இவர்களுக்கெல்லாம் மூலகாரணமாக இருப்பவனும் நானே.தர்மஸ்வரூப மாக இருப்பவன் நான்தான்: அதர்மஸ்வரூபனும்

நான்தான். தர்மம், அதர்மம் என்ற கட்டுப்பாடு கள் இல்லாதவன் நான். (நான் ஒருவிதக் கட்டுப் பாட்டுக்கும் உட்பட்டவனல்ல.) தார்மிகர்களால் சுலபமாய் அறியக்கூடியவன் நான். நான் தன்ய ஞனேன்.

பிரம்மாவுக்கு மூலகாரணமாக இருப்பவன் நான், மகான்களால் கௌரவிக்கத் தக்கவன் நான். மந்தமதிகளால் நான் கௌரவிக்கப்படாதவன். (அவர்களால் என்னை அறிய முடியாது) கர்வம், மானம், ராகம் (ஆசை) இவைகளால் மோகத்தை யடைந்த மனமுடையவர்களாய், துர்வாசனைகளி ஞல் தூண்டப்படுகிறவர்களால் அடையக்கூடாத வன் நான். (அவர்களால் என் நிஜ ஸ்வரூபத்தை அறிய முடியாது.) நான் தேவர்களையும் நமஸ்க ரிக்கமாட்டேன். அவர்கள்தான் எப்போதும் என்னை நமஸ்கரிப்பார்கள். என்னைக் காட்டிலும் வேறு வஸ்துவே இல்லை. சின்மாத்ர ஸ்வரூபமான சதாசி வனே நான், 'இது என்ன? இதன் ரூபம் என்ன? இது எப்படி உண்டாயிற்று? இதற்குக் காரண மென்ன? என்றெல்லாம் புத்திமாஞல் சிந்திக்கப் படவேண்டியதில்லை. எல்லாமும் என்னிடத்தில் இருக்கிறதென்று சிந்திக்கவேண்டும், ராகம் (விருப்பு) த்வேஷம் (வெறுப்பு) என்னும் அலைக ளுடன் கூடிய சம்சாரமென்னும் இந்தச் சமுத்திரம் பூர்வஜன்மத்தில் நான் செய்த புண்ணியங்க ளாகிய பாக்கியத்தால் ஏற்பட்ட அநுகூலமாகிய காற்றின் உதவியால் குருவின் கருணையாகிய தோணியால் தாண்டப்பட்டது.

தாய் நமக்குச் சரணமாகமாட்டாள். தகப்பனுர் சரணமாக மாட்டார். சகோதரர்கள் ஆகட்டும், வேறு மனிதர்கள் ஆகட்டும், நமக்குச் சரணமாக மாட்டார்கள் (நம்மைக்காப்பாற்றமாட்டார்கள்.) குருவினுடைய பாதங்கள்தாம் நமக்குச் சரணம். (அவை நம்மைக் காப்பாற்றும்.) அவரால் என் சிரசில் வைக்கப்பட்டிருக்கும் அவருடைய சரணங்களே எனக்கு எப்போதும் சரணம் (அடைக்கலமாக இருக்கின்றன.) குருவின் சரணம் இருக்கிறது, அவருடைய பார்வையில் எல்லேயில்லாத அளவற்ற கருணே பெருகுகிறது. ஆத்மா எல்லேயற்றிருக்கிறது. (எங்கும் நிறைந்திருக்கிறது) இந்த ஜன்மம் ஸபலமடைவதற்கு வேறு என்ன வேண்டும்? உத்தமமானதும் சிரேஷ்ட மானதும் சாதுக்களால் ஆதரவுடன் ஒப்பக்கூடியதுமான இந்த விஷயத்தை எவன் அறிகிருனே அவனே மேதாவி; அவனே முக்தன். இதில் சந்தேகமே இல்லே.

ஸ்ரீ சங்கர பகவத் பாதர் அருளிய

பால போத ஸங்க்ரஹம்

ஸம்பூர்ணம்

ஸ்ரீசங்கர பகவத்பாதாள் அருளிச் செய்த

ஏக ச்லோகீ

[கோடி சுலோகங்களால் கூறப்படும் தத்துவத்தை ஒரு சுலோகத்தினல் கூறுகிறேனென வேத வ்யாஸர் கூறி, வழி காட்டினர். பிறகு நமது பரமாசார்யாள் பல ஆயிரம் சுலோகங்களால் — நூறு ச்லோகங்களால்— பத்து ச்லோகங்களால் — ஆத்ம தத்துவத்தை உபதேசித்து ஒரே சுலோகத்தினலும் அந்த உபதேசிக்கிருர்.]

किं ज्योतिः तव ? भानुमानहनि मे
रात्रौ ? प्रदीपादिकं
स्यादेवं रवि दीप दर्शनविधौ किं
ज्योति राख्याहि मे ? ।
चक्षुस्तस्य निमीलनादि समये ?
धीः धियो दर्शने ?
किं तत्राहमहो भवान् परमकं ज्योतिः
तदस्मि प्रभो ॥

கிம் ஜ்யோதிஸ் தவ? பாநுமாநஹநி மே
ராத்ரௌ? ப்ரதீபாதிகம்
ஸ்யாத்தேவம் ரவி தீப தர்ஶநவிதௌ கிம்
ஜ்யோதி ராக்யாஹி மே? ।
சக்ஷுஸ்தஸ்ய நிமீலனதி ஸமயே?
தீ: தியோ தர்ஶநே?
கிம் தத்ராஹம் அஹோ பவாந் பரமகம் ஜ்யோதி:
ததஸ்மி ப்ரபோ ।

ஒரு ஶிஷ்யனைப் பார்த்து சில கேள்விகளைக் கேட்டு அவனது பதிலைக் கொண்டே ஆத்ம தத்துவத்தை விளக்கும் பெருமையைக் கீழே காணலாம்.

குரு : வஸ்துக்களைக் காண்கிறாயே? அது எந்த வெளிச்சத்தால்?

சிஷ்யன் : பகலில் எனக்கு ஸூர்ய வெளிச்சமே உதவுகிறது.

குரு : ராத்ரியிலோ?

சிஷ்யன் : தீபம், சந்த்ரன் முதலியன உதவுகின்றன.

குரு : அதிருக்கட்டும். அந்த ஸூர்யன், தீபம் முதலியவைகளை எந்த ஒளியால் காண்கிறாய் சொல்?

சிஷ்யன் : கண்களின் ஒளியால் காண்கிறேன்.

குரு : அந்தக் கண்ணை மூடிக்கொண்டு இருக்கும் போது உனக்குள்ளே அந்த உலகைக் காண்கிறாயே? அது எந்த ஒளியால்?

சிஷ்யன் : புத்தியே அவைகளை விளக்குகிறது.

குரு : அந்த புத்தியை எந்த ஒளியால் காண்கிறாய்?

சிஷ்யன் : அதை நான் என் உதவியைக் கொண்டே காண்கிறேன்.

குரு : அப்போது எல்லாவற்றையும் விளக்கும் ஒளி நீதான் போலிருக்கிறதே?

சிஷ்யன் : ஆமாம் ப்ரபோ! அந்த உயர்ந்த ஜ்யோதிஸ் நான் தான் - ஆத்மா. ஆத்மாதான் நமது உடலிலிருந்து புத்தியின் மூலமாகக் கண் வழியாகச் சென்று வஸ்துக்களைக் காண்கிறது. இதனால் 'பிரும்மைவாஹமஸ்மி' என்ற மஹாவாக்ய தத்வம் கூறப்பட்டது.

ஸ்ரீ

ஸ்ரீ சங்கர பகவத்பாதர்

அருளிய

ஸ்தோத்ர நூல்கள்

தேவநாகரி-தமிழ் லிபிகளில்

பதவுரை கருத்துரையுடன்

கணேச பஞ்சரத்னம்	
கணேச புஜங்கம்	0-40
கனகதாரா ஸ்தோத்ரம்	0-20
மீனாக்ஷி பஞ்சரத்னம்	0-20
கோவிந்தாஷ்டகம்	0-40
பவானி புஜங்கம்	
தேவி அபராதக்ஷமாபணம்	0-30
அன்னபூர்ணாஷ்டகம்	
கங்காஷ்டகம்	0-40
சிவபஞ்சாக்ஷர ஸ்துதி	
உமாமகேச்வரஸ்தோத்ரம்	0-40
காலபைரவாஷ்டகம்	
மணிகர்ணிகாஷ்டகம்	0-30
மநீஷா பஞ்சகம்	
ஸோபான பஞ்சகம்	0-40
மற்றும்	
ஆதித்த ஹ்ருதயம்	0-25
சந்திரசேகராஷ்டகம்	0-25
தேவி மானஸ பூஜா	0-30

விவரங்களுக்கு ;

ஜோதி நிலையம் - சென்னை-18



